# COUNTRY HERALD.

# கிராம தூதன்.

கௌரவ பத்திராதிபர்:

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை.

**1942 ஏப்பிரல்**

மலர்-ச இதழ்-ச


## வாழ்க்கை முறை.

1. நாம் பிறர் ஆக்கத்துக்குத் துணையாகவும் வாழவேண்டும்; அது முடியாது போயினும், பிறர் கேடு சூழாதேனும் வாழவேண்டும். பிறர்க்கின்னா நாம் முற்பகவில் நினைக்க, நமக்கின்னா பிற்பகலிலேயே திட்டமாக விளைகிறது. ஆதலால், பிறரைக் கெடுத்து வாழ நாம் நினைத்தலுங்கூடாது.

நம் பெற்றோர்கள் நம்மை வளர்த்துவிட்டபடி, நாமும் இவ்வுலக வளர்ச்சிக்காக நம் மக்களை வளர்த்துவிட வேண்டும். நாம் பிறந்த இவ்வுலக, நாம் பிறந்த காலத்திலும் செம்மையுறச் செய்திடவும் வேண்டும்.

நாம் நம் குடும்பத்தினருக்குக் கைம்மாறு கருதாதும் உதவிவருவதுபோல, இவ்வுலகமாம் பெருங் குடும்பத்தினருக்கும் நாம் உதவி வரும் அளவிற்கே, இவ்வுலகம் நாம் வாழ்வதற்கேற்ற இடமாகும். பிறருக் குதவியில்லா நாட்டிலும் கொடும்புலி வாழுங் காடும் நன்றேயாகும்.

**இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை.**

2. ... மக்கு ஏழை க... ள்; இனி, ... ழுத்தாக ... படி ஒழு ... க்களும் ... ; தவறி ... ண்ணம்.

**... நாத் தாக்கூர்.**



சுழன்றும், ஏர்ப்பின்னதுலகம்—*திருவள்ளுவர்.*


1. பிச்சைக்காரர் தொல்லை ஒழியாதா?
2. செட்டாக உரமிடுதலும் செட்டான நடுகையும்
3. கைத்தறி மாகாணக் கூட்டுறவுச் சங்க அறிக்கை
4. குழந்தையும்நற்பழக்கப் பயிற்சியும்
5. குழந்தையைப் பேணி வளர்க்கும் முறை
6. கிராமச் சீரமைப்பு



பிரசுரகர்த்தர்:

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் : பிரார்த்தனை ... ... | 97 |
| 2. | பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள் ... ... | 98 |
| 3. | பிச்சைக்காரர் தொல்லை ஒழியாதா? I ... ... | 99 |
| 4. | நெல்லுக்குச் செட்டாக உரமிடுதலும் செட்டான நடுகையும் ... ... | 100 |
| 5. | சென்னைக் கைத்தறி நெசவாளர் மாகாணக் கூட்டுறவுச் சங்க அறிக்கை 1940-41 | 103 |
| 6. | குழந்தையும் நற்பழக்கப் பயிற்சியும் ... ... | 105 |
| 7. | பம்பாய் மாகாணத்தில் மட்பாண்டங்கள் செய்வதற்கிருக்கும் சௌகரியங்களைப்பற்றிய அறிக்கை ... ... | 108 |
| 8. | அ. குழந்தையைப் பேணி வளர்க்கும் முறை ... ... | 110 |
| | ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள் ... | ,, |
| 9. | கிராமச் சீரமைப்பு ... ... | 113 |
| 10. | இரண்டு அடியார்கள் ... ... | 116 |
| 11. | செய்தித் திரட்டு: | |
| | அ. உழவு, வாணிபம் முதலிய தொழிற் செய்திகள் ... ... | 118 |
| | ஆ. கிராம முன்னேற்ற தலதாபன அரசாங்கச் செய்திகள் ... ... | 121 |
| | இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள் ... ... | ,, |
| | ஈ. கூட்டச் செய்திகள் : தீர்ப்புக்கள் ... ... | 123 |
| 12. | அறிவுரைத் திரட்டு: | |
| | அ. உழவு வாணிபம் முதலிய தொழிற் குறிப்புக்கள். ... ... | 125 |
| | ஆ. கிராம முன்னேற்றக் குறிப்புக்கள் ... ... | ,, |
| | இ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனுமுறையாராய்ச்சிக் குறிப்புக்கள் ... | 126 |
| | ஈ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள் ... ... | 127 |


## புத்தகங்கள், பத்திரிகைகள், அறிக்கைகள் வரவு.

*கீழே காணும் பிரசுரங்களைப் பெற்றிருக்கிறோம்; அவற்றை உதவியவர்களுக்கு நம் நன்றியையும் செலுத்திக்கொள்ளுகிறோம்.*

1. Indian Information. No. 89.
2. Bombay Information. Vol. iii. Nos. 7-10
3. Mysore Information. Vol. v No. 2.
4. Hyderabad Information Vol. ii. No. 6.
5. ,, Press Notes, Communiques etc.
6. Madras Press Notes, Nos. 45-63.
7. ,, Communiques. Nos. 16-26.
8. Director of Agriculture Press Notes.
9. கூட்டுறவு மலர் 13. இதழ்கள் 17-18.
10. பாலர் கல்வி தொகுதி 6. இதழ் 12.
11. வித்தியாதனம் தொகுதி 6. இதழ்கள் 11-12.
12. போதனுமுறை கொத்து 32. எண் 9.
13. சிறுவர் அறிவுக் கதிர் தொகுதி 5. பகுதி 10.
14. மிராசுதார் தொகுதி 8. பகுதி 6.
15. யுத்தப்படங்கள் எண் 12.
16. நல்வழி மலர் 31. இதழ் 3.
17. வர்த்தக ஊழியன் எண் 116.
18. செங்குந்த மித்திரன் தொகுதி 16. இதழ்கள் 2-3.
19. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 19. பரல் 10.
20. ஞானசம்பந்தம் தொகுதி 1. பகுதி 4.
21. தேவி தொகுதி 1. பகுதி 5.
22. சத்தியபோதினி தொகுதி 32. பகுதிகள் 1-3.
23. கமத்தொழில்விளக்கம் தொகுதி 40. பகுதி 1.
24. The Morning Star Jaffna Vol. 102. No. 5.
25. The Village Republic, Vol. 4 No. 2.
26. Educational Broadcasts, January to March. Director, All-India Radio, Calcutta.
27. Report on the settlement of Land Reven. for Fabali 1350, 1940-41. Price 12 as. The Superintendent, Govt. Press. Madras.
28. Report on the operations of the department of Agriculture, Madras Presidency 1940-41.
29. Report of Activities 1941-42. Research and Extension department, The American College, Madura.

# THE COUNTRY HERALD

# கிராம தூதன்

**ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை**

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமைப்பிணி தீர்ப்போம்."

*இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.*

| மலர்: ச | 1942, ஏப்ரில்—சித்திரபானு, சித்திரை | இதழ்: ௬ |
|---|---|---|


## 1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை

நல்லோர்கள் மிகக்குறைவே நாட்டிலந்த நல்லோர்கள் நலம்யாவும் நாளும் ஈவாய்!
எல்லோர்க்கும் நல்லோராய் இருக்கவேண்டும் எண்ணமதில் திண்ணமதே இயைய வேண்டும்
பொல்லாத கொடுமையெலாம் போக்கவேண்டும் புத்திமிக நலமெனவே புரக்கவேண்டும்
கல்லாரும் கற்றறிவு கவினவேண்டும் காருலகில் கனிஉள்ளம் காட்டவேண்டும்! —தமிழ்க்கலை.

### * விவசாயப் பள்ளியெழுச்சி

இராகம்-பூபாளம் தாளம்-ரூபகம்

பல்லவி

எழுமின்! எழுமின்! எனதன்பை யுடையீர்! (எழு)
ஏக்கை வாழ்த்திப்பொன் னேர்கொண்ட நடையீர்!

அநுபல்லவி

பொழுதுபுலர்ந்திசை புட்களு மார்த்தன
புதுமலர்க்காவுஞ் செவ்வானமும் பூத்தன (எழு)

சரணம்

உரம்வைத்துப் பூமியை உழுதுண்டு மகிழ்வோம்
உழைப்பற்ற சோம்பர்தம் உளம்வெட்க இகழ்வோம்
பரவுஞ் சுகாதாரப் பணிசெய்து திகழ்வோம்
பைந்தமிழ்த் தொண்டர்செம் பதங்களைப் புகழ்வோம் (எழு)

ஒருமித்து வேளாண்மைக் குயர்நன்றிகாட்டி
ஊக்கமில் லாமக்கட் கூக்கத்தை யூட்டி
பருவத்தே பயிர்செய்து பஞ்சத்தையோட்டி
பாடும்சுப்ரமண்யன் பாமாலை சூட்டி (எழு)

* இஃது மதுரை வித்வான் ஸ்ரீ கா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் மாணவர் வித்துவரத்தினம் R. சுப்பிரமணியம் பாடியது.

# 2. பொன்னுரைகள் : பொறுக்குமணிகள்

I. "தானஞ் செய்ம்மின் றவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் றீநட் பிகழ்மின்"

தானம் செய்ம்மின்; தவம் பலதாங்குமின்; செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்பு இகழ்மின்

II "கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்".

—சிலப்பதிகாரம்.

III. மக்கள் உலகின்கண் தலை சிறந்து முன்னணியில் நிற்றற்கு அச்சாணியென விளங்கா நிற்கும் பெண்டிர் உலகியல், அறிவு, கல்வி, வீரம் பொதிந்தவர்களாய் இருப்பார்களாயின், அவர்கள் தங்குழவிகளுக்குத் தானறிந்த ஞானம் கல்வி வீரம் முதலியவற்றைப் பாலுடன் ஊட்டி வளர்த்து, நீராடித் திலகமிட்டு, நல்லுடை யுடுத்தி, ஐம்படைச் சதங்கை சாத்தி, அணிமணிச்சுட்டி முடித்து, பிறை நுதல் வதனதை முத்தமிட்டு, தொட்டிலில் வளர்த்து உறங்கச்செய்யுங்கால் வீரம் ஞானம் பொதிந்த பாக்களையே தேனூறு வாக்கால் அன்பூறிப் பாடுவார்களேயானால், அக்காலை அக்குழவிகளும் செவிவாயாகவும் நெஞ்சுகளனாகவும் கொண்டு நுகரும். தொட்டிலில் வளர்த்தகாலையிற்கேட்ட வீரவுணர்ச்சியும், வீரமகளால் ஊட்டப்பட்ட வீரப்பாலுணர்ச்சியும் நாளும் நாளும் வளர்ந்துகொண்டேவரும்.

(அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)இரா. நாராயணசாமி.

IV. 1. தமிழர் நிலை எது? திருக்குறளின் சிறப்பு, கம்பர் கவிநயம், சிலப்பதிகார மேன்மை, மணிவாசகத்தின் மாண்பு, பெரியபுராணத்தின் பெருமை முதலியவற்றை அறிய முயற்சிக்கின்றனரா? இத்தகைய புனித நூல்களின் பெருமைகளை வேற்றுநாடுகளில் பிறந்து தமிழ் கற்ற பெரியார்களே போற்றியிருக்கிறார்களெனின், இவற்றின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ?

செங்குந்தமித்திரன்.

V. 2. தெய்வக்குறளிசைத்த திருவள்ளுவப் பெருமான் தமிழ் மொழிக்குத் தனிநிலை அளித்தவர். மேலை நாட்டவரும் பிறரும் வியந்து போற்றும் வகையில் அமைந்த குறளை எண்ணாதவரும் தமிழரோ? கல்லாதவரும் தமிழரோ? மேலைநாட்டறிஞராகிய 'போப்' என்பார் தன்னைத் 'தமிழ் மாணவன்' எனக் கூறிக் கொள்ளச்செய்தது குறளன்றோ? இக்குறளைத் தமிழர் ஒவ்வொருவரும் ஆர்வமுறப் பயிலல் வேண்டும்.

தமிழ்க்கலை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" குறள்.

3. தலையங்கம் :

# பிச்சைக்காரர் தொல்லை யொழியாதா?

## I

ஐக்கிய மாகாண நகராண்மைச் சட்டம் (The Provincial Municipalities Act 1916) பிச்சை யெடுப்பதை ஒரு குற்றமாகக் கண்டிருக்கிறது. ஆனால், அதனை அமுலுக்கு இதுவரை கொண்டுவந்ததில்லை. பம்பாய் நகரக் காவற் சட்டமும் (The City Police Act) பிச்சை யெடுப்பதை ஒரு குற்றமாகக் காண்கிறது. பம்பாய்க் குழந்தைகள் சட்டம் (The Children's Act 1924) குழந்தைகளைப் பிச்சை யெடுக்கத் தூண்டுவதையும் ஒரு குற்றமாகக் கண்டிருக்கிறது. அதில் அனாதரவான குழந்தைகளைக் காப்பாற்றிவர வேண்டுமெனவும் கண்டிருக்கிறது. என்றாலும், இரண்டே இரண்டு ஊர்களில் மட்டும், அதுவும் சமீபத்தில் அதற்கான விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மைசூர் காவற்சட்டத்தி (The Mysore Police Act) லும் பிச்சையெடுப்பதைக் குற்றமாகக் கண்டிருக்கிறது. மைசூர் இளம்பிள்ளைச் சட்டத்தின் (The Mysore Juveniles' Act 1939) படிக்கும் பிச்சை யெடுப்பது குற்றமாகும். என்றாலும், மைசூரில் இந்தச் சட்டங்கள் இன்னும் அமுலுக்கு வரவில்லை. ஐதராபாத்தும் பிச்சை யெடுப்பதை ஒரு குற்றமாக்கிச் சமீபத்தில் ஒரு சட்டம் (Prevention of Professional Beggary Act) செய்திருக்கிறது. இந்தச் சட்டத்தை முதல் முதலாக ஐதராபாத்து நகரில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் உத்தேசித்திருக்கிறது. ஆனால், அதற்கான ஏற்பாடு இன்னும் செய்து முடியவில்லை. சென்னை நகர காவற்சட்டம் (City Police Act) பிச்சை யெடுப்பதைக் குற்றமாக்கிச் சென்ற ஆண்டில் திருத்தப்பட்டிருக்கிறது. அதன்படி வேலை செய்யும் இடங்களும் (Work Houses) தனி விடுதிகளும் (Special Homes) இதுவரை அமைக்கப்படவில்லை. ஆகையால், அந்தச் சட்டமும் இன்னும் அமுலுக்கு வரவில்லை. இப்படியாக நம் நாட்டின் பல பாகங்களில், பிச்சை யெடுப்பதை ஒரு வெறும் தொல்லையாகக் (mere nuisance) கருதி அதனைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யலாமென்றிருக்கின்றனர். அப்படிக் கருதப்படுவதும் வெகுவாய் நகரங்கள் சம்பந்தமாகவே கருதப்படுகின்றன. பிச்சை யெடுக்கும் தொழில் விருத்தியாவதற்கான காரணங்களைத் (Beggary Problem) தெளிந்து அதனை ஒழிப்பதற்கான ஏற்பாடெதுவும் செய்வதாக இல்லை. அப்படிச் செய்யாதவரை — கிராமங்களிலும் பிச்சைக்காரர் தொல்லையை ஒழிக்காதவரை, பட்டினங்களிலிருக்கும் பிச்சைக்காரர்களும் கிராமங்களுக்கு வந்து சேருவதால் கிராமங்களின் சங்கடங்கள் பெருகக்கூடும்.

பிச்சை யெடுப்பது, சீமையிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (United States of America) சில நாடுகளிலும்—பட்டினங்களிலும் மட்டுமே யல்லாமல் கிராமங்களிலும், குற்றமாக இருந்துவருகிறது. அங்கெல்லாம் பிச்சை யெடுப்பதற்கான காரணங்களைத் தவிர்ப்பதற்கும் வேண்டும் ஏற்பாடுகள் செய்து வரப்படுகின்றன. உலகத்திலேயே சீமையில் தான் முதல் முதல் ஒவ்வொருவருக்கும் வேலை தரவேண்டும் அல்லது, சோறேனும் போட்டு வர வேண்டுமென்று 1597ம் வருடத்தில் (Poor Law) சட்டம் செய்யப்பட்டது. ஆனால், பிச்சை யெடுப்பது பிசகென்று 1531ம் ஆண்டு முதல் பல சட்டங்கள் செய்தும் அதனை வெறும் சட்டத்தால் தடுப்பது சிரமமாகத் தோன்றியதன் பின்னதாகவே அந்தச் சட்டம் செய்யப்பட்டது.

பிச்சையெடுப்பதற்குக் கடுமையான தண்டனைகளும் சீமையில் விதிக்கப்பட்டு வந்தன. 1531-ம் வருடச் சட்டத்தின்படி முதல் தடவை சவுக்கடி கொடுக்கப்பட்டு வந்தது; இரண்டாந் தடவை காதுகள் மூளியாக்கப்பட்டு வந்தன. மூன்றும் தடவை பிச்சையெடுக்கக் கண்டால் தூக்கிலேயே யிடப்பட்டனர். 1547-ம் ஆண்டில் தூக்கின் கொடுமை வெகுவாகத் தணிக்கப்பட்டது. அதன்படி பிச்சையெடுப்பவர்களுக்குச் சூடு போட்டு அவர்களை ஏற்றுக் கொள்பவர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு அடிமையாக விட்டும் வந்தனர். இப்பொழுது சீமையில் அமுலிலிருக்கும் சட்டம் 1824-ம் வருடத்தில் திருத்தப்பட்டதாகும். அதன்படி, பிச்சையெடுப்பதற்கு முதல் தடவை ஒரு மாதமும் இரண்டாம் தடவை மூன்று மாதங்களும் அதன் பின் ஒரு வருடமும் சிறைவாசம் விதிக்கப்பட்டு வருகிறது.

இப்படியாக வேலை கொடுக்கிறது அல்லது சோறு போடுகிறது. என்றிருந்தும் அதனையும் மீறிப் பிச்சையெடுத்தால் தண்டிப்பதென்றிருந்தும் சீமையில் இப்பொழுதும் பிச்சையெடுப்பது பூராவாக நின்று விடவில்லை. ஊசி, தீப்பெட்டி, மெழுகுவர்த்தி இவற்றை விற்கப் போகிற பாவனையாக வீடு வீடாகவும் போய் பிச்சையெடுக்கின்றனர். சிறு படமெழுதிக் கொண்டு அந்தப் படத்தை விற்கப்போகிற பாவனையாகவும் பிச்சையெடுக்கின்றனர். தெருக்களிலும் ஒதுக்கமான இடங்களிலிருந்து கொண்டு தரையில் படங்கள் வரைவதும் போலீசார் பார்க்காத சமயங்களில் அந்த வழியே போகிறவர்களிடம் தங்கள் கருத்தைக் குறிப்பாகச் சொல்லிப் பிச்சை கேட்பதுமாக இருக்கின்றனர். இப்படியாகச் சீமையில் உபாயப் பிச்சை இப்பொழுதும் நடந்து கொண்டுதானிருக்கிறது. (தொடரும்.)

---

## 4. வேளாண்மை :

# நெல்லுக்குச் செட்டாக உரமிடுதலும் செட்டான நடுகையும்

முன்னுரை. 1920-ம் ஆண்டில் நம் மாகாணச் சனத்தொகை நாலு கோடியே இருபத்தேழு இலட்சமாக இருந்து, 1940-ம் ஆண்டில் நாலு கோடியே எண்பத்தாறு இலட்சமாகக் கூடியிருக்கிறது. இதே காலத்தில், நெல்லுள்பட உணவுத் தானியங்கள் சாகுபடியாகும் பரப்பு இரண்டு கோடியே எண்பத்திமூன்றே காலே யரைக்கால் இலட்சம் ஏக்கரிலிருந்து இரண்டு கோடியே இருபத்திமூன்றரை இலட்சமாகக் குறைந்திருக்கிறது. 1920-ம் ஆண்டில் ஒரு கோடியே ஒன்பது இலட்சம் ஏக்கர் நன்செய் சாகுபடியாகி யிருந்தது; 1939-40-ம் ஆண்டில் தொண்ணூற்றொன்பது இலட்சமாகக் குறைந்திருக்கிறது. 1940-41-ம் ஆண்டில் ஒரு கோடியே ஐந்து லட்சம் ஏக்கர் வரை நெல் சாகுபடியாயிற்றென்றாலும், சண்டையினால் நெல்லின் ஏறியதை உத்தேசித்துக் கொஞ்சங் கூடியிருப்பதைத் தவிர வேறில்லை. எப்படிப்பார்த்தாலும், நெல்லுள்பட உணவுத் தானியங்களின் விளைவு நபர் வீதம் முன்னிலும் குறைவாகவேயிருக்கிறது. நெல்லின் குறைவு, முக்கியமாகப் பர்மா சியாம் கொச்சின் சைனா நாடுகளிலிருந்தும் சிறி தளவிற்கு அதிக மேனியாலும் நிரம்பப் பட்டுவருகிறது. என்றாலும், வெளி நாட்டு இறக்குமதி சென்ற சில மாதங்களாக மிகவும் குறைந்துவிட்டது; பர்மாவிலும் சண்டை பரவக்கூடியதாக இருப்பதால் (பரவிவிட்டதால் ப-ர்). இன்னும் குறையவே செய்யும். ஆகையால், நம்முடைய மாகாணம் உணவுத் தானியக்குறைவின் ஆபத்துக்குத் தப்பவேண்டுமென்றால், சாத்தியமான எல்லா வகையிலும்

சி,

விளைவை அதிகப் படுத்த வேண்டியது ஒவ்வொரு சமுசாரியின் கடமையுமாகும்.

நெல்லின் விளைவை இரண்டு வகையாக அதிகப்படுத்தலாம்:— ஒன்று. தண்ணீர்ப் பாசனப் பரப்பை அதிகப்படுத்துவ தாகும். (2) நல்லமுறைகளைக் கையாடுவதாலும் நல்ல விதை விதைப்பதாலும் விளைவை அதிகப்படுத்தலாம். நெற்சாகுபடியின் பரப்பை அதிகப் படுத்துவதற்கு அவ்வளவாக இடமில்லை. ஆகையால், சாகுபடியாகி வரும் நிலங்களின் விளைவை அதிகப்படுத்துவதற்கான முறைகளையெல்லாம் கண்டுபிடிப்பதே சாத்தியமான வழியாகும். அதிகமேனி தருகிற விதைகளை விதைத்துத் திடமான நாறுகளை வளர்த்து அவற்றைப் போதிய இடைவெளிவிட்டு நட்டு உரமிடுவதினாலேயே இது சாத்தியமாகக்கூடும்.

அதிகமேனி தரும் விதைகள்:— பிரதேச விதைகளைக் காட்டிலும் விவசாய இலாகா கொடுத்துவரும் விதைகள் சிறந்தனவாக இருக்கிறதென்று எல்லாரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். என்றாலும், அந்த விதைகளை எல்லாருக்கும் நிரந்து கொடுப்பதற்குச் சரியான ஆட்களில்லாததால் இதுவரை சாகுபடியாகிவரும் பரப்பில் கால்வாசியே திருத்திய விதைகள் சாகுபடியாகி வருகின்றன. 95 சதவீதம் சுத்தமான விதை விவசாய இலாகாவிலும் சில சமுசாரிகளிடத்திலும் கிடைக்கும். ஆகையால், சமுசாரிகள் கொஞ்சம் சிரமமெடுத்து விசாரிப்பார்களென்றால், எல்லோருக்கும் நல்ல விதை கிடைக்கக்கூடும். திருத்திய விதைகள் ஐந்து முதல் பதினைந்து சதம்வரை அதிகமேனி தருகின்றன. ஆகையால் திருத்திய விதைகள் மட்டுமே சராசரி நெல்விளைவைப் பத்து சதம் எளிதாக அதிகப் படுத்திவிடும். இன்னொரு முக்கியமான காரியம். உரமிடுவதற்கும் பக்குவம் செய்வதற்கும் தக்கதாக, திருத்திய விதை பிரதேச விதையைக்காட்டிலும் அதிக மேனியே காணும்.

நல்ல நாறுகள் தயார் செய்யும் விதம்:—ஏக்கருக்கு நூறு இராத்தலும் அதற்கதிகமும் விதைக்கின்றனர். நாற்றங்காலில் நாறுகள் நெருங்கி வளருகின்றன. அவை மெலிந்து பலவீனமாகவுமிருக்கின்றன. அவற்றைப் பத்து முதல் பதினைந்து வரை ஒன்றாகச்சேர்த்து நடுகின்றனர். இதனால் விதை அதிகமாகச் சேதமாவது மட்டுமல்ல, விளைவும் குறைந்து விடுகிறது. நன்றாகச் சாகுபடி செய்வதற்கு ஏக்கருக்கு 25 முதல் 40 இராத்தலுக்கு மேல் விதை வேண்டியதில்லை. நன்றாக உரமிட்ட நாற்றங்காலில், எட்டு முதல் பத்துச் செண்டுக்குள் 25 முதல் 40 இராத்தல் விதையை விதைத்தால் நாறுகள் நன்றாகவும் திடமாகவும் வளரும். அவை ஓர் ஏக்கரில் நடுவதற்கும் போதும். அனேக சமுசாரிகள் விதைச் செலவை இப்படியாகக் குறைத்திருக்கின்றனர். என்றாலும், இன்னும் அனேக இடங்களில் அதிகமாக விதைக்கும் பழைய பழக்கமு மிருந்து வருகிறது.

நடுகை:— நெற் சாகுபடியில், நடுகை இடைவெளிக்குத தக்கதாகத் தானியவிளைவும் வைக்கோலின் அளவும் வித்தியாசப்படும். பருவகாலத்திற்கும் நெல் வகைக்கும் நிலத்தின் செழுமைக்கும் உரத்தின் அளவிற்கும் தக்கதாக நாலுமுதல் பத்தங்குலம் வரை இடைவெளி விடலாம். நன்றாக வளர்ந்தபொழுது, இடை வெளியெல்லாம் பயிர் அடர்ந்திருக்க வேண்டுமென்பதே குறிப்பாக இருக்கவேண்டும். சத்தில்லாத நிலங்களில் நெற்பயிரில் கணுக்கள் தாராளமாக உண்டாவதில்லை. ஆகையால், அப்படி நிலங்களில் சுமார் நாலு அங்குல இடைவெளியே இருக்கலாம். கொழுத்த நிலங்களில் பத்தங்குல இடைவெளியு மிருக்கலாம். இடைவெளி அதிகம் விடுவதால், மேனி அதிகம் கண்டுவிடுமென்று நினைத்து விடக்கூடாது. பயிர்கள் பார்க்க அழகாகவும் பல கணுக்கள் வைத்து மிருக்கலாம்; கதிர்கள் நீளமாயுமிருக்கலாம்; இருந்தாலும் அதிக விளைவுதாக்கூடிய விதமாக நெருங்கி யிருக்கவில்லையென்றால் பிரயோசனமில்லை. ஆகையால், இடைவெளி குறைவாகவாவது போட்டுப் பிசகலாமேயன்றி கூட்டிப்போட்டுப் பிசகக்கூடாது.

அதிக இடைவெளி விடுகிறபொழுது ஒற்றை நாறாக நடுவதில் விசேடப் பிரயோசனமில்லை. இரண்டுமூன்று நாறுகள் கணுக்கள் விடுகிறமாதிரி ஒரே நாறு கணுக்கள் விடக்கூடியதில்லை; ஆகையால், இரண்டு முதல் நான்கு நாறுகளை ஒன்றாகச் சேர்த்து நடுவது சிலாக்கியம்.

அதிகப்பணம் செலவழித்து உரமிடவேண்டும்:— உரமிடுவதால் அதிகமாக விளையுமென்பதைத் தெரியாத உழவரில்லை. ஒரு பயிருக்கு உரமிடுவதினால், அந்த உரச்செலவும் கிடைக்கவேண்டும்; திட்டமான தெளிவான இலாபமுமிருக்கவேண்டும். இப்பொழுது சண்டையின் காரணமாக நெல் சுமாராக விற்கிறது; எண்ணெய்ப்பிண்ணாக்குகள் எலும்புத்தூள் மீனுரம் போன்ற கிடைக்கக்கூடிய உரங்களும் சுமாராக விற்கின்றன. ஆகையால், உழவர்கள் தங்கள் நெற் சாகுபடிக்குத் தாராளமாக உரமிட்டு நல்ல பலனடைவதற்கு இஃதோர் அரிய சந்தர்ப்பமாகும்.

ஓர் ஏக்கர் நிலத்தில் சாகுபடியாகிற நெற்பயிர் சராசரி 48 இராத்தல் காலகத்தையும் 23 இராத்தல் எரிகக்காடியையும் 41 இராத்தல் சாம்பர உப்பையும் எடுத்துக்கொள்ளுகிறது. ஆகையால், நெற்சாகுபடி செய்கிறபொழுதெல்லாம் இந்தப் பயிருணவை நிலத்துக்குத் திரும்பக் கொடுக்காவிட்டால், நிலத்தின் சத்துக் குறைந்துபோகுமென்பதற்கும் குறைவாகவே விளையுமென்பதற்கும் சந்தேகமில்லை. நம் மாகாணத்து நன்செய் நிலங்களில், பல நூற்றாண்டுகளுக்குக் காணக்கூடியதாகச் சாம்பர உப்பு இயற்கையாகவே அமைந்திருக்கிறது. ஆகையால், சாம்பர உப்பை எவ்வகையிலாகிலும் சேர்க்கவேண்டுமென்றே அவசரமில்லை. எரிகக்காடியும் நிலத்திலிருக்கிறதென்றாலும், சாம்பர உப்பைப்போல் அவ்வளவு அதிகமாக இல்லை. ஆகையால், ஏக்கருக்கு ஒரு அந்தர் மேல்காடி எரிகை (Super Phosphate) அல்லது எலும்புத்தூள் (Bone-meal) போட்டுவரவேண்டும். ந்த உரம் நடுகையின்போது இடவேண்டும். ற்கும் முன்னதாகவே குழையும் சாணியுரமும் எண்ணெய்ப் பிண்ணாக்கும் மீனுரமும் போட்டிருந்தால், இது மிகுந்த பலனைத் தரும். நிலத்தில் காலகம் மிகவும் குறைந்த அளவேயிருக்கிறது. ஆனால், அதனைப்போல வேறு எதுவும் அதிக மேனிதாரச் செய்வதில்லை. மேற்கண்ட உரங்களாலும் நவச்சியக் கந்தகையாலும் நிலத்தின் காலகச்சத்தை அதிகப்படுத்தலாம். என்றாலும், கரிம உரமும் (Organic) வேதியுரமும்(Chemical) கலந்திடும்பொழுது அவற்றைத் தனியாக இடுவதைக் காட்டிலும் அதிகப் பலன் கிடைக்கிறது. கரிம உரம் அதிலும் குழையுரம் நிலத்தை நன்றாக இளக்கும். வேர் ஆழமாகப் போவதற்கும் இடந்தரும். ஆகையால், நிலத்தில் காலகத்தை அதிகப்படுத்துவதற்காகச் செய்யும் உரத்தில் ஒரு பாகம் குழையாகவும் பாக்கிப் பிண்ணாக்குப் போன்ற உரங்களாகவுமிருக்கலாம். அப்படியிடுவதை, இரண்டு தடவையாக நடுகையின்போதும் களையெடுக்கும்பொழுதும் அதாவது பூப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவும் இட்டால், நல்லமேனியும் காணும். நாற்பத்தெட்டு இராத்தல் காலகம் நிலத்துக்குச் சேர்க்க நாலாயிரம் இராத்தல் குழை, அறுநூறு இராத்தல் நிலக்கடலைப் பிண்ணாக்கு, தொள்ளாயிர இராத்தல் மீனுரம் அல்லது இரண்டு அந்தர் நவச்சியக் கந்தகை இடவேண்டும். இந்த உரங்களிலெல்லாம் மிகவும் சௌக்கியமானது குழையுரமே; அதற்கும் அடுத்தபடியாகவே, பிண்ணாக்குரத்தைச் சொல்லவேண்டும். நவச்சியக் கந்தகையே எல்லாவற்றிற்கும் அதிகக் கிரயமாகும். ஆகையால், அதனைத் தனியாக உபயோகிக்காமல் குழையுரத்தோடேனும் பிண்ணாக்குரத்தோடேனும் உபயோகிப்பதே உசிதமாகும்.

பத்தாம்பி விவசாய ஆராய்ச்சி நிலயத்தில் நடுகைக்குமுன் குழையும் பிண்ணாக்கும் இட்டும் நடுகைக்கு ஒரு மாதத்துக்குப் பின் நவச்சியக் கந்தகையிட்டும் மூன்று இரண்டாம்போகச் சாகுபடியைக் கவனித்துப் பார்த்ததில் கீழே கண்டவிதம் பலன் கணிக்கப்பட்டிருக்கிறது. உரமே போடாததில் ஏக்கருக்கு 1461 இராத்-

தல் நெல் விளைந்திருக்க, ஏக்கருக்கு 600 இராத்தல் வேப்பம்பிண்ணாக்கு இட்டதில் 1738 இராத்தல் நெல்லும் அதாவது 19 சதம் அதிகமாகவும், ஏக்கருக்கு 500 இராத்தல் ஆமணக்கம் பிண்ணாக்கு இட்டதில் 1843 இராத்தல் நெல்லும் அதாவது நூற்றுக்கு 26 சதம் அதிகமாகவும், ஏக்கருக்கு 4000 இராத்தல் குழைபோட்டதில் 1873 இராத்தல் நெல்லும் அதாவது 28 சதம் அதிகமாகவும், ஏக்கருக்கு 400 இராத்தல் நிலக்கடலைப் பிண்ணாக்கிட்டதில் 1876 இராத்தல் நெல்லும் அதாவது 28 சதமே அதிகமாகவும், ஏக்கருக்கு 80 இராத்தல் நவச்சியக் கந்தகையிட்டதில் 1872 இராத்தல் நெல்லும் அதாவது 28 சதமே அதிகமாகவும் கண்டிருக்கிறது.

ஏக்கருக்கு 600 இராத்தல் வேப்பம் பிண்ணாக்கும் 80 இராத்தல் நவச்சியக் கந்தகையும் இட்டதில் ஏக்கருக்கு 2263 இராத்தல் நெல்லும் அதாவது 55 சதம் அதிகமாகவும், ஏக்கருக்கு 500 இராத்தல் ஆமணக்கம் பிண்ணாக்கும் 80 இராத்தல் நவச்சியக்கந்தகையும் இட்டதில் 2324 இராத்தல் நெல்லும் அதாவது 59 சதம் அதிகமாகவும், ஏக்கருக்கு 4000 இராத்தல் குழையும் 80 இராத்தல் நவச்சியக் கந்தகையும் இட்டதில் 2337 இராத்தல் நெல்லும் அதாவது 60 சதம் அதிகமாகவும், ஏக்கருக்கு 400 இராத்தல் நிலக்கடலைப் பிண்ணாக்கும் 80 இராத்தல் நவச்சியக்கந்தகையும் இட்டதில் 2334 இராத்தல் நெல்லும் அதாவது 63 சதம் அதிகமாகவும் கண்டிருக்கின்றன.

மேலே சொல்லிய புள்ளி விவரங்களைக் கவனிக்கும் பொழுது, குழை அல்லது பிண்ணாக்குகளுடன் நவச்சியக் கந்தகையை இடும் பொழுது அதிக மேனி காண்பதாகத் தெரிகிறது. நிலக்கடலைப் பிண்ணாக்கும் நவச்சியக் கந்தகையைப் போலவே மேனியும் தருகிறது. ஆகையால், குழை கிடைக்காத அல்லது குழை கிடைப்பது சிரமமாகவுள்ள இடங்களில் பிண்ணாக்குகளையும் தாராளமாக நெல்லுக்கு உரமாக இடலாம். நம் மாகாணத்தின் ஒவ்வொரு பாகத்திலும் குழையும் பிண்ணாக்குகளும் அதிகமேனியே விளைவித்திருக்கின்றன. கூடியவரை, குழை உரம் சொந்த நிலங்களிலேயே வளர்க்கப்படவேண்டும்.

சண்டை நாமிருக்கு மிடத்தை நெருங்கிவந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், பர்மாவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் நம்முடைய தேவையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் பொழுது நெற்பயிருக்கு உரமிட்டு அதன் விளைவை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டியது ஒவ்வொரு சமுசாரிக்கும் வெகு முக்கியமான கடமை யாகும்.

The Director of Agriculture (Madras) Press Note.

---

**5. கூட்டுறவு:**

# சென்னைக் கைத்தறி நெசவாளர் மாகாணக் கூட்டுறவுச் சங்க அறிக்கை, 1940-41.

(சாரம் II)

இந்த மாகாணச் சங்கம் பிரதம சங்கங்களுக்கு இரண்டு இலட்சத்து முப்பத்திராயிரத்து எழுபது ரூபாவரை நூல் கொடுத்து வரும்படியாகத் தன் பொறுப்பில் ஏற்பாடுசெய்திருந்தது. சங்கங்களுக்கு எழுபத்தேழாயிரத்து இருநூற்றுத்தொண்ணூற்ரூறு ரூபா சென்ற ஆண்டில் கடன் கொடுத்திருந்தது. ஆண்டின்முடிவிற்குள் தொண்ணூற்றீராயிரத்து நூற்றியெழுபத்திஞலு ரூபா வசூலாகியிருக்கிறதென்றாலும் இன்னும் நூற்றுப் பதினைந்து சங்கங்களிலிருந்து அறுபத்தேழாயிரத்து இ.

நூற்றைம்பத்தாறு ரூபா வசூலாக வேண்டிய திருக்கிறது.

அரசாங்கம் கைக்கடனுகக் கொடுத்திருந்த முப்பதினுயிர ரூபாவையும் இந்தமாகாணச் சங்கம் சென்ற ஆண்டு மேமாத முடிவிற்குள் திருப்பிக்கொடுத்து விட்டது. சென்னை மாகாணக் கூட்டுறவுப்பாங்கு கடனுகக்கொடுத்திருந்த இருபத்தையாயிர ரூபாவையும் சென்ற ஆண்டின் முடிவிற்குள்ளாகவே கொடுத்து விட்டது. அதற்குப்பின், அந்தப் பாங்கு இந்த மாகாணச் சங்கத்திற்கு நூறுயிர ரூபா கடன் கொடுத்து மிருக்கிறது.

கூட்டுறவுப் பதிவாளரின் வேண்டுகோளின் படி, மத்திய பாங்குகளும் தொண்ணூற்றுமூன்று சங்கங்களுக்கு மூன்று இலட்சத்து நாலாயிரத்து முந்நூற்று முப்பத்தெட்டு ரூபா கடன் கொடுத்திருக்கின்றன. அவற்றிலும், முக்கியமாக அவ்வித உதவியைச் செய்த சேலம் மதுரை திரிசிராப்பள்ளி நெல்லூர் காக்கினடா மங்களூர் திருநெல்வேலி ஜில்லா பாங்குகளுக்கு எங்கள் நன்றியறிதலைச் செலுத்திக்கொள்வதுடன் கோயம்புத்தூர் கள்ளிக்கோட்டை (கோழிக் கூடு) வேலூர் கடலூர் குண்டூர் மத்திய பாங்குகளையும் அவ்விதம் உதவிசெய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

புதுப் புது ரகங்களின் மாதிரி செய்து தருவதற்காக, சென்ற ஆண்டில் நியமித்திருந்த இருவரும் அறிக்கையாண்டில் 244 புது ரகங்கள்-27 சேலைகள் 159-வேட்டிகள் 58-உட்சட்டைத்துணிகள் பல சங்கங்களுக்கும் போய்ச் செய்து காட்டியிருக்கிறார்கள். இன்னும், ரூபா 40 சம்பளத்தில் அப்படி இருவரை நியமிக்க உத்தேசித்திருக்கிறோம்.

சாய மேற்பார்வையாளர் (Dyer Supervisor) மதுரைச் சாயத்தொழிற்சாலையில் மேலாளராக (Manager) இருந்து வருகிறார். விற்பனைக்காக ரூபா 30 சம்பளத்தில் முன் நியமித்திருந்த 15 பெயர்களையும் 1-5-41 முதல் நீக்கிவிட்டு, மாதம் ரூபா 60 சம்பளமும் விற்பனைக்குத்தக்க கமிசனும் பேசி எட்டுப் பெயரை நியமித்திருக்கிறோம். சென்னை சேலம் பெசுவாடா இராசமகேந்திரபுரம் இந்த இடங்களுக்காக நியமிக்கப்பட்ட விற்பனையதிகாரிகள் சென்ற ஆண்டின் முடிவிற்குள்ளாகவே தங்கள் வேலையில் சேர்ந்து வேலைபார்த்து வருகிறார்கள். மற்றவர்களும் அதற்குப்பின் சேர்ந்து தங்கள் வேலைகளைப் பார்த்து வருகிறார்கள்.

மேற்பார்வைக்குப் போதிய சிப்பந்திகளை நியமிக்காமல் நெசவாளர் சங்கங்களை அதிகப்படுத்திக்கொண்டு போக முடியாது. கூட்டுறவு விசாரணைக்கழகம் சிபார்சு செய்திருக்கிறபடி அரசாங்கச் செலவில் பார்வையாளர்களை நியமிக்கவேண்டும்.

இந்த மாகாணச் சங்கம் சென்னை வேலூர் திரிசிராப்பள்ளி முதலிய எட்டிடங்களில் விற்பனைச் சங்கங்களும் பலசரக்குமளிகைச் சங்கங்களும் கைத்தறி நெசவுத்துணிகளை ஆதரித்து வருகின்றன. துண்டு மடிகளில் சில தரங்கள் சீமையில் பதிவு செய்யப் பட்டிருப்பதால், அதே மாதிரித் துணிகளை நெய்து விற்பதற்கில்லை. அந்தத்தடையை நீக்கித்தரும்படியாக அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அரசாங்கப் போலீசு இலாகா, அரசாங்க அச்சகம் (Government Press), சாதல்வார் ஆபீசு (Stationery Office), மருத்துவசாலை இவற்றிற்கு வேண்டிய பொருள்களையும் சிறைச்சாலை யதிகாரிகள் கொடுக்கமுடியாத பொழுது இந்தச் சங்கத்தின் மூலம் வாங்கிவர வேண்டுமென்பதாக அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. சென்னை அரசாங்க அச்சகம் மேல் விசாரணைக்காரரும் (Superintendent) தன் இலாகாவிற்கு வேண்டிய சாமான்கள் சிலவற்றைக் கொடுத்து வரும்படியாக உத்தரவிட்டிருக்கிறார்.

பிரதம சங்கங்களுக்குக் காரியதரிசியாகக் கூடியவரை நெசவாளர்கள் வகுப்பிலிருந்தே

அவர்களிடம் சாமீன் வாங்கிக்கொண்டு நியமிக்கப்பட்டிருக்கிறது. அப்படி நியமிப்பதற்காகத் தெரிந்தெடுத்திருக்கும் 108 பெயர்களில் 14 பெயர்கள் கூட்டுறவு இலாகா இளம் பார்வையாளர்கள். (Junior Inspectors) பத்துப் பெயர்கள் அரசாங்க சேவைக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்கள்.

இப்படியாகப் பலவிதமான சங்கடங்களுக்கிடையிலும் இந்த மாகாணச் சங்கம் ஆறு யிரத்து அறுநூற்று ஐம்பத்தொரு குடும்பங்களுக்கு வேலை கொடுத்து வந்திருக்கிறது. அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து வருவதிலிருந்து மற்ற சேவாளர்களில் சிலருக்கும் நல்ல சம்பளம் கிடைத்து வருகிறது. இவர்களெல்லாரும் கடனில்லாதவர்களாகவு மிருக்கிறார்கள். தங்கள் சம்பாத்திய மிச்சத்தைத் தங்கள் சங்கங்களில் இருப்பாகச் சேர்த்தும் வருகிறார்கள். கெட்டுப்போயிருக்கும் சங்கங்களை உயிர்ப்பிக்கவும் எல்லாச் சங்கங்களையுமே இலாபத்தில் வேலைசெய்து வரச்செய்யவும் வேண்டும் ஏற்பாடுகள் செய்து வரப்படுகின்றன. இந்த மாகாணச் சங்கத்துக்கும் இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் பல பிரதம சங்கங்களுக்கும் உதவிவரும் கூட்டுறவுப் பதிவாளருக்கும் துணைப்பதிவாளர்களுக்கும் கீழ்ப்பதிவாளர்களுக்கும் (Sub-Registrars) இந்தச் சங்கம் தன் நன்றியை வினயமாகச் செலுத்திக்கொள்ளுகிறது.

---

6. கல்வி:

# குழந்தையும் நற்பழக்கப் பயிற்சியும்

A. C. Deve Gowda, Government Training College, Mysore.

(சாரம்)

1. முன்னுரை: பெற்றோர்கள் வயதில் முதிர்ந்திருக்கலாம்; வாழ்க்கையனுபவமுள்ளவர்களாக இருக்கலாம்; ஆனால், அவை காரணமாக, அவர்கள் தங்களையும் குழந்தைகளையும் சரியாகத் தெரிந்துகொண்டிருப்பதாகச் சொல்லிவிடமுடியாது. குழந்தைகளை வளர்ப்பதற்கின்றியமையாத அன்பு அவர்களிடமிருப்பது உண்மை. ஆனால், அந்த இயற்கைவாய்ப்பைச் சரியாக உபயோகிப்பதாக இருந்தாலன்றி, அதனால் குழந்தைகளுக்குத் தீமையே விளையும்.

அமெரிக்காவிலும் பிற இடங்களிலும் செய்துவரும் ஆராய்ச்சிகளிலிருந்து வயது முதிர்ந்தவர்கள் (பெற்றோர்களும் ஆசிரியர்களும் ப-ர்) குழந்தைகளை நடத்தும் முறையும் போக்கும் அவர்கள் சிறு குழந்தைகளாக இருக்கும்பொழுது அவர்களிடம் பதிந்திருந்த பழக்கங்களையும் கருத்துக்களையும் அனுசரித்திருப்பதாகவே தெரிகிறது. பெற்றோர்கள் பிறர் யோசனையின்றித் தாங்களாகவே தங்கள் குழந்தைகளின் வளர்ச்சியை உணரவும் அதற்குத் துணைபுரியவும் கூடுமா? பலவாறாகவும் ஆராய்ந்து தெரிவதால்தான், குழந்தைகளினுடைய சுபாவத்தை வயதானவர்கள் அறியக் கூடும். புத்திசாலிகளாகவுள்ள பெற்றோர்கள் இத்தகைய புதுக் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருப்பார்கள்.

2. பெற்றோர்கள் பலவகைப்படுவர்: தங்களனுபவமே பெரிதாக நினைக்கும் பெற்றோர்கள் குழந்தைகளை அவரவர்கள் மனம்போல் போகவிடமாட்டார்கள்; மிகுந்த கட்டுப்பாடு செய்வார்கள்; அவர்களைத் தங்களுக்கு மரியாதை செய்யச்சொல்லிக் கட்டாயப்படுத்துவார்கள். அந்தகைய அளவுக்கு மிஞ்சிய கட்டுப் பாட்டில் வளரும் குழந்தைகள், புழுங்கிப் போய் கலகப் பிரியர்களாவார்கள்; அல்லது சுயபுத்தியே யில்லாமல் சொற்புத்தியே கேட்பவர்களாவார்கள்.

இன்னொருவகைப் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு எதுவுமே மறுப்பதில்லை; அசௌகரியமான அனுபவங்கள் எதுவும் அவர்களுக்கு ஏற்படாதபடியும் காப்பார்கள்; அவர்களைக் கண்டிக்கவுமாட்டார்கள்; அவர்கள் சொல்லுகிறபடியெல்லாம் செய்தும் வருவார்கள். இப்படி வளரும் குழந்தைகள், மற்றவர்களைத் தங்களைப்போன்ற மனிதர்களாக மதிக்கவுமாட்டார்கள்; அவர்களுக்கும் உரிமைகளுண்டென்பதை உணரவுமாட்டார்கள்.

இன்னும் ஒருவகைப் பெற்றோர்களுண்டு. அவர்கள் குழந்தைகளைக் கவனிப்பதேயில்லை. அவர்கள் குழந்தைகளுக்கு வேண்டிய உணவையும் உடையையும் கொடுத்தால்போதும், படிக்கவைத்தால்போதும், பணத்தைக் கொடுத்தால் போதுமென்று நினைப்பவர்கள். இப்படி வளரும் குழந்தைகளின் போக்கு ஒரே மாதிரியாக இராது. தன்னை ஒருவரும் விரும்புவதில்லையென்று நினைத்துத் தானும் எதிலும் பிடித்தமில்லாமலும் சிரத்தையில்லாமலுமிருந்துவரும்.

மற்றுமொருவகைப் பெற்றோர்களுண்டு. அவர்கள்தான் குழந்தைகளே முக்கியமெனக் கருதும் பெற்றோர்கள். அவர்களும் குழந்தைகளுக்குதவி செய்வார்கள். ஆனால், அவர்கள் குழந்தையின் சௌகரியத்தை முக்கியமாகக் கருதாமல், குழந்தையின் நன்மையையே முக்கியமாகக் கருதிச் செய்வார்கள். அவர்கள் உடனே அடையும் பலனைக்காட்டிலும் பின் நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய பலன்களையே முக்கியமாகக் கருதுவார்கள். இப்படி வளரும் குழந்தைகள் தன்னம்பிக்கையுடன் வளர்ந்துவரும்.

**3.** குழந்தைகளின் சுபாவம்:- குழந்தைகள் இயற்கையாகவே நல்லவர்களாக இருக்கிறார்களென நினைக்கும் பெற்றோர்கள், அவர்கள் மனம்போன போக்கிலேயே விட்டுவிடுவார்கள். சுற்றுப்புறம் சரியாக இருந்தால், அதனாலும் குறைவு நேராது. சுற்றுப்புறம் விரும்பத்தகாததாக இருக்குமென்றால், அதனால் குழந்தைகள் கெட்டுப் போவார்கள்.

குழந்தைகள் இயற்கையிலேயே கெட்டவர்களாக இருக்கிறார்களென்று நினைக்கும் பெற்றோர்கள் குழந்தைகளை அவர்கள் பிரியம்போல் ஒன்றும் செய்யவிடாமல் அளவுக்கு மிஞ்சிய கட்டுப்பாடு செய்வார்கள். அதனாலும் குழந்தைகள் கெட்டே போவார்கள். அவர்களிடம் முணுமுணுப்பும் கலகப் பிரியமுமே வளரும்; அவர்களுக்குச் சுய நம்பிக்கையே யிராது; அவர்களால் தன் யோசனையாக எதையும் செய்துகொள்ள முடியாது.

குழந்தைகள் பிறரைச் சார்ந்தே வளர வேண்டியவர்களாகவும் பெற்றோர்கள் அவர்களைப் பூரண சுதந்தரம் அடைவதற்குப் பழக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். அப்படிப் பழக்குவதும் அதிபாலியத்திலிருந்தே செய்யப்பட வேண்டியதாகும்; படிப்படியாக வளர்க்கப்பட வேண்டியதாகும்; குழந்தைகளின் சத்திக்கும், சுற்றுப்புறத்துக்கும் ஏற்ப மெதுவாகவோ தீவிரமாகவோ செய்யப்பட வேண்டியதுமாகும். குழந்தைகளையே முக்கியமாகக் கருதும் பெற்றோர்களால்தான் அப்படிச் செய்யச் சாத்தியமாகும்.

சமீபகாலமாக, செய்தே படிப்பது சரியெனக் கல்வியுலகம் கருதிவருகிறது. குழந்தைகளின் விருத்திக்கு இக்கருத்து மிகவும் பொருந்தும். பழக்கங்களிலிருந்தே குழந்தைகள் சுத்தமாக இருந்து வரவும் தங்கள் மனப்போக்கை அடக்கியாண்டுவரவும் சமூக சம்பிரதாயங்களை அனுசரித்து வரவுங்கூடும். இவற்றையெல்லாம் கற்றுக் கொள்ளுவதின் வேகம் இவற்றை யெல்லாம் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் வாய்ப்பதைப் பொறுத்ததேயாகும். இத்தகைய அனுபவம் குழந்தைகளுக்கு மிகவும் பயன்பட வேண்டுமென்றால், ஆரம்பத்திலிருந்தே இவற்றை அவர்கள் சரியாகச் செய்துவர வேண்டும்; சரியாகச் செய்துவருகிறோமென்ற திருப்தியும் அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே ஏற்பட வேண்டும். அவர்கள் ஆரம்பத்தில் தவறுவார்களென்றால், முதல் கோணல் முற்றும் கோணலென்ற

மாதிரி கேடாகவே முடியும். எவரும் பிற்கால வாழ்க்கையிலும் தவறக்கூடும்; அப்படித் தவறுதலை விடாமுயற்சியால் மாற்றிக்கொள்ளவும் முடியும், அதுமட்டுமல்ல; அப்படித் தவறுதல்கள் நல்ல படிப்பனையாகவு மிருக்கும். ஆனால் இதேமாதிரியாகப் பாலியத் தவறுதல்களைச் சொல்ல முடியாது. அவர்கள் சரியாகச் செய்வது அதற்கு மேலும் அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தரக்கூடும். இப்படியாக வளருவதற்குப் பெற்றோர்கள் கவனமும் வேண்டும்.

4. பெற்றோர்களின் முன் மாதிரி:—பிரசாரத்திலும் முன்மாதிரி சிறந்ததென்று ஒரு பழமொழியுண்டு. குழந்தைகளிடத்தில் அறிந்தும் அறியாமலும் பிறரைப் போல் செய்யும் சுபாவம் மிகுந்திருக்கிறது. சில பெற்றோர்கள் நான் சொல்லுகிறபடி செய், நான் செய்கிறபடி செய்யாதே யென்று குழந்தைகளுக்குச் சொல்லக்கூடும். அவர்கள் அப்படிச் சொன்னபோதிலும் அவர்கள் செய்கிற மாதிரிதான் குழந்தைகள் செய்வார்கள். தங்கள் பெற்றோர்கள் செய்வதே சரி யென்றும் அவர்கள் சொல்லுவது அத்துணை சரியாக இருக்கா தென்றும் நினைப்பார்கள். ஆகையால், தங்கள் குழந்தைகளிடத்தில் எவ்விதமான யோக்கியதை உண்மை தைரியம் வளரவேண்டு மென நினைக்கிறார்களோ அப்படியே பெற்றோர்களும் யோக்கியதையாக வாழ்ந்து வர வேண்டும்.

அ. அமைதியான குடும்பம்:- வீட்டிலுள்ள குழப்பங்களும் சண்டைகளும் குழந்தைகளையும் பாதிக்கும். ஆகையால், பெற்றோர்கள் அதுவும் குழந்தைகள் முன்னிலையில், ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொண்டோ அல்லது சண்டை போட்டுக் கொண்டோ இருக்கக்கூடாது.

ஆ. ஒரே சீரான வாழ்க்கை:- பெற்றோர்கள் நேரத்திற்கொருவிதமாகவும் சமையம் போலவும் நடந்து வரக்கூடாது. இன்னது சொன்னால் இன்னது கேட்டால் இன்னது நடக்குமென்று குழந்தைகள் திட்டமாகத்தெரியக்கூடியதாக அவர்கள் வாழ்க்கை யிருந்து வர வேண்டும். குழந்தைகளின் கட்டணைக்காக வேனும் சிணுங்குதலுக்காக வேனும் ஏய்ப்புக்காக வேனும் ஒன்றைச் செய்வது அல்லது செய்யாதிருப்ப தென்பதுவுங் கூடாது.

இ. சுதந்தரமும் சந்தர்ப்பமும்:- குழந்தைகளின் விளையாட்டுகளுக்கு வேண்டிய சாமான்களும் தனியாக இருக்க வேண்டும்; அவர்கள் பொழுது போக்கிற்கென ஒரு திட்டமான இடமும் இருந்துவர வேண்டும். குழந்தைகளின் விளையாட்டுகளில் பெற்றோர்கள் தலையிடாமல் அவர்கள் பிரியம்போல விளையாட விட்டுவிடவேண்டும். விளையாட்டுகளில் தான் அவர்கள் தாங்களாகப் பல காரியங்களை யோசிக்கவும், அவற்றில் ஒரு முடிவுக்கு வரவும், அவற்றைச் செய்துமுடிக்கவும் அவர்களுக்குச் சந்தர்ப்பங்களமையும். அவர்களுக்கே அல்லது சமுகத்துக்கே பாதகமான முயற்சிகளில் அவர்கள் பிரவேசிக்கும் பொழுது தான், பெற்றோர்கள் தலையிட்டு அவற்றைத் தடுக்கவேண்டும்.

ஈ. நேர்மை:- பெற்றோர்களுக்குப் பல குழந்தைகளிருக்குமென்றால், அவர்களெல்லாரையும் ஒன்றுபோலவே கருதவேண்டும். அவர்கள் முன்னிலையில் ஒருவர் அப்படி ஒருவர் இப்படி யென்று அவர்களைப் பற்றிப் பேசவுங்கூடாது. அவர்களுக்குள் பொறாமைக்கேனும் வேண்டாத போட்டிக்கேனும் இடந்தரவுங்கூடாது. அவர்களைப்பற்றி ஏதேனும் ஒரு முடிவிற்கு வருவதற்கு முன் அவர்களுடைய கருத்துக்களின்ன தென்பதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். சுருங்கச் சொல்லில், அவர்கள் ஒருவரோடொருவர் ஒற்றுமையாக வாழ்வதற்கும் அந்த ஒற்றுமை வளர்வதற்குமான காரியங்களையே பெற்றோர்கள் செய்து வரவேண்டும்; அதற்குப் பாதகமான காரியங்களைத் தவிர்க்கவேண்டும்.

உ. தோழமை:- குழந்தைகள் பிரியப்பட்டால், அவர்களோடு விளையாடுவதைக் குறைவாக நினைக்காமல், பெற்றோர்கள் அவர்

களோடு சேர்ந்துவிளையாடலாம். இப்படிநெருங்கிப் பழகுவதால் குழந்தைகளும் அனேகக் காரியங்களைப் புதிதாகப் படித்துக் கொள்ளுவார்கள். பெற்றோர்களும் குழந்தைகளின் சுபாவத்தையும் திறமையையும் போக்கையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளக்கூடும். பெற்றோர்கள் குழந்தைகளின் மகிழ்ச்சியையும் துக்கத்தையும் தங்களுடையதாகவும் கருதவேண்டும். இயற்கை அழகுகளையும் பொருட்காட்சிச் சாலை மிருகக்காட்சிச்சாலை, மற்றும் அறிவைப் பெருக்கும் இடங்களுக்கும் அவர்களைக் கூட்டிப்போய் அவர்களுக்கு அவற்றை விளக்கியும் காட்டவேண்டும்.

குழந்தைகள் பெற்றோர்களோடு பழகுவதுபோல, தங்களுடைய வயதுப் பிள்ளைகளோடும் நெருங்கிப் பழகிவரவேண்டும். அவர்களோடு பழகுவதால், அவர்கள் சமுக சம்பிரதாயங்களையும் எளிதில் கற்றுக்கொள்ளுவார்கள். ஆனால், அவர்கள் பழகிவருகிற குழந்தைகள் சரியான குழந்தைகள்தானா என்பதைப் பெற்றோர்கள் கவனித்து வரவேண்டும்.

—Hindu.

தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது (குறள்)

---

## 7. குடிசைத்தொழில்: கைத்தொழில்

# பம்பாய் மாகாணத்தில் மட்பாண்டங்கள் செய்வதற்கிருக்கும் சௌகரியங்களைப் பற்றிய அறிக்கை

( சாரம் )

வீட்டுப் பாண்டங்களை, அவற்றிற்கான களிமண் கிடைக்குமிடங்களில், பளபளப்புக் கொடுத்தும் கொடுக்காமலும் சிறுதொழில்களாகத் தற்கால முறைப்படி செய்துவரலாம்; பட்டினங்களில் அதனை விருத்தியாகவும் செய்யலாம்; வெள்ளைநிறப் பாண்டங்களை, வியாபார முறையில் ஏராளமாக விற்க, பொறிக்கருவிகளால் (Power driven machinery) செய்வதற்குவேண்டிய பொருள்கள் கிடைக்குமென்றால், அவற்றையும் செய்துவரலாம். கோப்பைத்தட்டு (Cups, saucers etc.) முதலிய வெள்ளைப் பாண்டங்கள் பிற இடங்களிலிருந்து இம் மாகாணத்திற்கு ஏராளமாக வருகின்றன; ஆனால், மற்ற மாகாணங்களிலிருந்து வருவன மிகக் கொஞ்சமேயாகும். வெள்ளைப் பாண்டங்கள் தூய வெள்ளையாக இருக்கவேண்டுமென்றால், சீனக் களிமண்ணையே உபயோகிக்கவேண்டும். சீமைச் சீனக் களிமண்ணி..லும் மற்றும் அதுபோன்ற பம்பாய் மாகாணக் ..களிமண்ணிலும் செய்யப்படும் பாண்டங்களைப் ..ல்..ால் சுத்தமாக இருக்கின்றன.

முதலாவதாக, நல்ல களிமண் கிடைக்குமிடங்களில், அவ்விடங்களிலுள்ள குயவர்களுக்குத் தற்கால முறையில் பயிற்சி தரவேண்டும். இந்தப் பயிற்சி குயப்பள்ளியிலாயினும் தொழிற்சாலையிலாயினும் தரப்படலாம். இதற்கெனப் பள்ளி இப்பொழுதில்லாததால் நான்கு முதல் ஆறு குயவர்க்கு ஏதாமொரு தொழிற்சாலையில் பலவிதப் பாண்டங்கள் செய்வதற்கும் சொல்லிவைக்கலாம். இப்படி ஆறுமாதம் சொல்லிவைத்தால் போதும்.

பயிற்சி பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும், குயத்தொழிலைத் தற்கால முறைப்படி செய்துவருவதற்கவசியமான பொருள்களையும் கருவிகளையும் கொஞ்சகாலத்திற்குக் கடனாகக் கொடுத்துதவவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் ஏதாமொருமாதிரிப் பாண்டமே செய்துவரவேண்டும். ஆரம்பத்தில் இப்படியாகச் செய்துவந்தால், அவர்களுக்குள் போட்டிக்கும் இடமிராது. அவரவர்கள் சுற்றுப்புறங்களில் விலையாகக்கூடிய அளவிற்கே செய்துவரவேண்

டும். அப்படிச்செய்தால், விலையாகாத பாண்டங்களும் குவியா. அவர்களுக்கு முதலிலுதவும் பொருள்கள் கருவிகளின் கிரயத்தை அரசாங்கம் பல தடவைகளாக வாங்கிக்கொள்ள வேண்டும். குடிசைத் தொழிலாகச் செய்யப்படும் பொருள்களை விற்பதற்காக ஏற்படுத்தப்படும் அரசாங்கக் கடைகளில் வைத்தும் அவற்றை விற்பதற்குதவவேண்டும். பின்னும் வேண்டியிருக்கும் முதலையும் கைத்தொழிலிலாகாத் தலைவர் கடனுகக் கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டும்.

நிலக்கரி போட்டு எரிக்கிற காளவாயில் தான் அதிகமாகச் சுடவேண்டிய மட்பாண்டங்களைச் சுடமுடியுமென்று சிலர் நினைக்கின்றனர். பளபளப்புக் கொடுத்தும் கொடுக்காமலும் பல பாண்டங்களை விறகு போட்டு எரிக்கும் காளவாயிலில் 1080° நூற்றளவை முதல் 1730° நூற்றளவை வரை சூட்டில் சுடப்பட்டன. அவை வெளிநாட்டுப் பாண்டங்களைப் போலவே திருப்திகரமாகவும் இருந்தன.

பம்பாயில் ஒரு மத்திய தொழிற்சாலையமைத்து, கிராமக் குயவர்களுக்குவேண்டிய தொழில் தேவைப் பொருள்களைச் சௌக்கியமாகக் கொடுத்துவரவேண்டும். வியாபாரத் தோரணையில் பாண்டங்களை எப்படிச் செய்வதென்றும் அவற்றிற்குப் பளபளப்பு எப்படிக் கொடுப்பதென்றும் கற்பித்துவரவேண்டும். கிராமங்களில் கிடைக்கிற களிமண்ணை, தற்கால முறைப்படியே பாண்டங்களாகச் செய்வதற்கும் கிராமக் குயவர்களுக்குப் பயிற்சி தரவேண்டும். அவர்களுக்குத் தொழில் செய்வதில் நேரும் இடைஞ்சல்களை நீக்குவதற்கான யோசனைகளும் சொல்லிவரவேண்டும். சங்கடமில்லாமல் தொழிலை நடத்திவருவதற்கு அப்போதைக்கப்போது தேவையான வர்ணப்பொருள்கள் பளபளப்புப் பொருள்கள் மற்றும் பொருள்களும் கொடுத்துவரவேண்டும்.

ஒரு வேதி நூல் விற்பனரை உதவியாக (Assistant chemist) நியமித்து, அவரைக் கிராமங்களுக்கும்போய்த்திருந்தியமுறைகளைச் செய்து காட்டிவரச் சொல்லவேண்டும். பாண்டங்கள் செய்யவும் அவற்றிற்குப் பளபளப்புக் கொடுக்கவும் விறகுக் காளவாயிலில் அவற்றைச் சுட்டெடுக்கவும் சொல்லித்தரவேண்டும். இப்படியாக, செய்யப்படும் பொருள்களை விற்பதற்கான ஏற்பாடுகளும் செய்துவரவேண்டும்; இப்படியெல்லாம் செய்தால், கிராமங்களிலும் குயத்தொழில் புதுமாதிரியாகவும் விருத்தியாகவும் நடைபெறும். இம்மாதிரி விருத்தி செய்வதற்குப் போதிய களிமண்ணும் பலவேறு இடங்களில் இருப்பதாகச் சோதனை போட்டும் அரசாங்கம் தெரிந்திருக்கிறது. இன்னும் பல வேறு இடங்களிலும் போதிய களிமண் கிடைக்கக்கூடும்.

(இப்படியாக, நம் மாகாணத்திலும் விருத்தியாகச் செய்யக்கூடிய வேலைகளையும் அவற்றிற்கு வேண்டிய களிமண் கிடைக்கக்கூடிய இடங்களையும் நிதானித்துத் தற்கால முறைகளைக் கற்பித்தும் வரவேண்டும். அப்படிச்செய்யப்படும் பொருள்களை விற்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து வரவேண்டும். வேலைகளை விருத்தியாகச் செய்து வருவதற்கு வேண்டிய பணமும் கடனுகக் கொடுத்துதவவேண்டும். இப்படியாகவெல்லாம் செய்து வந்தால்தான், நம் நாட்டுப் பணமேனும் வெளிநாட்டுப் பொருள்களுக்காக வெளிநாடுகள் போய்விடாதபடி நாம் காத்துக் கொள்ளமுடியும். இப்படிச் செய்யாதவரை, நம் நாட்டுப் பணமும் வெளிநாடு போய்க்கொண்டேயிருக்கும். நாமும் நாளுக்கு நாள் அதிக ஏழைகளாகவே ஆகிவருவோம். ப–ர்.)

---

சந்திரனுக்குச் சுயம்பிரகாசம் இல்லை. அது சூரியனிடத்தில் வெளிச்சத்தைப் பெற்றுத் தானும் பிரகாசிப்பதோடு பூமிக்கும் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. அதைப்போல் நீ கடவுளிடமிருந்து பெற்ற சௌகரியத்தையும் செல்வத்தையும் நீயும் அனுபவிப்பதோடு மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடு.

## 8. சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை

# அ. குழந்தைகளைப் பேணிவளர்க்கும் முறை

குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே சுதந்திரவுணர்ச்சியை ஊட்டவேண்டும். தங்கள் காரியங்களைத் தாங்களாகவே செய்துகொள்ள - உடையணிய கழற்ற மேல்கால் கழுவப் பழக்கிவிடவேண்டும். துணிகளை மடிக்கவும், அவற்றையும் விளையாட்டுச் சாமான்களையும் அவற்றிற்குரிய இடங்களில் வைத்து, வேண்டும்போது தாங்களே எடுத்துக் கொள்ளவும் பழக்கவேண்டும். உடலை உடையைச் சுத்தமாக வைத்துவரவும் பழக்கவேண்டும். (வெளியே போய் விளையாடி வந்தாலும் சும்மாவந்தாலும் காலைக் கையைக் கழுவி முகம் கழுவி வீட்டிற்குள் வரும்படியாகப் பழக்க வேண்டும். (ப—ர்

அவர்களைச் சுயநலமற்றும் பிறருக்குபகாரமாகவும் வாழப் பழக்கவேண்டும். குழந்தைகள் எல்லாம் தான் தானென்றிருப்பார்கள். அவர்களுக்கு மூத்த சகோதர சகோதரிகளும் அப்படியே யிருக்க அவர்கள் காண்பார்கள். (பெற்றோர்களும் அப்படியே யிருப்பார்கள். குழந்தைகளுக்காகவேனும் பெற்றோர்கள் தங்களைத் திருத்திக்கொண்டு, குழந்தைகளையும் தக்க வாறு பயிற்றிவரவேண்டும். ப—ர்)

ஒரே குழந்தையாயிருந்தாலும் அதற்குச் செல்லம் கொடுப்பது சரியல்ல. அதற்கென வாய்க்கு உருசியான உணவு கொடுப்பதாலும், அதன் பிரியம்போலெல்லாம் நடப்பதாலும், அதன் பிரியத்திற்கிணங்கவே பிறரை நடக்கும்படி செய்வதாலும், அது தன்னைப்பற்றிப் பெருமையாக நினைக்கத் தொடங்கும்; அதனால் நாளுக்குநாள் கெட்டுப்போகும். பின் வாழ்க்கையில், அத்தகைய தற்பெருமை, பிறரெவரும் பழிக்கக்கூடியதாகவே முடியும்.

எந்தக் குழந்தையையும் பிற குழந்தைகளோடு விளையாடத் தூண்டவேண்டும். பிற குழந்தைகளுக்குச் செப்புக்களையும் மற்றும் விளையாட்டுச் சாமான்களையும் கொடுத்து வாங்கவும் தூண்டவேண்டும். ஒரே குடும்பத்தில் இரண்டு மூன்று குழந்தைகளிருந்தாலும், அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் இசலிக்கொண்டிராமல் எதையும் கொடுத்து வாங்கியும் ஒருவர் நோக்கத்திற்கொருவர் இணங்கியும் பழகிவரத் தூண்டவேண்டும். மூத்த குழந்தை இளைய குழந்தைக்கு விளையாட்டு சொல்லித்தரலாம். பாடம் சொல்லித்தரலாம். எந்தக் குழந்தையும் தாய் ஏவுகிற வேலையைக்கேட்கலாம்; மற்றும் சகோதர சகோதரிகளுக்கும் உதவிவரலாம். (இப்படிச் சிறுவயது முதலே வளர்க்கப்படும் குழந்தைகள்தான், பின் வாழ்க்கையிலும் பிறருக்குபகாரமாகவும் கவலையற்றும் வாழமுடியும். ப—ர்)

—Mail.

---

# ஆ. நாட்டுவைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள்

### I மாதளம்பூ

வாந்திபித்த தோடமொடு மாறாக் கடுப்பனலத்
சேர்ந்து நின்ற மூலரத்தந் தீர்க்குங்காண்

—மாந்தளிர்க்கை

மாதே! யிரத்தபுட்டி வல்லபலன் உண்டாக்கும்
பூதலத்துள் மாதளையின் பூ.

—அகத்தியர் குணவாகடம்.

பித்த வாந்தி வயிற்றுக் கடுப்பு வெப்பம் மூலம் இவை நீங்கும். உடலுக்குப்பலமும் புட்டியும் தரும்.

மாதளம் பிஞ்சு

மலக்கழிச்சல் சீதத்தால் வந்த கழிச்சல்
சலக்கழிச்சல் சோரியாற் சாரும்--பலக்கழிச்சல்
மாறும் புளிப்பான மாதுளம்பிஞ் சால்அயிலே
ஆளும்கண் மாதே! அறி.

—அகத்தியர் குணவாகடம்.

மலக்கழிச்சல் சீதக்கழிச்சல் சலக்கழிச்சல் மற்றும் மழையால் வரும் கழிச்சல் எல்லாம் புளிப்பான மாதளம் பிஞ்சால் தீரும்.

மாதளம் பழம்

சங்கையறச் சோற்றவிர்க்குஞ் சந்நியா சஞ்சர்த்தி
யங்கையதி தாகமமைச் சாருமோ—கங்கை
இருந்தாடி மக்கட் கிரத்தலச்செய் நோய்போம்
இருந்தாடி மக்கனிகட் கேண்.
வாய்நீர்வ றல்கசப்பு வாந்திவிக்கல் மந்தமிகக்
காய்வெப்பம் நெஞ்செரிவு காதடைப்பும்—ஓயா
மயக்கமுந் தீர்ந்துவிடும் மாதளம் பழத்தால்
தயக்கம் அறத் தேமொழியே! சாற்று.
வெடித்துவீழ் பழத்தைவாங்கி மெல்லிய சீலைகட்டி
கடுக்கெனப் பிழிந்துகொண்டு கண்டுசர்க் கரையுங் கூட்டிக்
குடித்திட வெப்புமாறுங் குளிர்ந்திடும் அங்க மெல்லாம்
வடித்தநன் மொழியினளே! மாதளம் பழத்தின் சாறே.

பேச்சைத் தவிர்க்கும் சந்நியாசம், வாந்தி, தாகம், பித்தம் இவை போம். வாய் நீர் வறல் வாய்க்கசப்பு, வாந்தி விக்கல், மாந்தம், காய்ச்சல், நெஞ்செரிவு, காதடைப்பு, நீங்காத மயக்கம் இவையெல்லாம் தீர்ந்துபோகும். வெடித்த பழத்தைப் பிழிந்து கற்கண்டு சேர்த்து சாற்றைக்குடிக்க மூலச்சூடு மாறும்; உடம்பெல்லாம் குளிர்ந்திடும்.

## II. மாதளை

இனிப்புள்ள மாதளம் வித்தானது சக்கிலத்தை இறுக்குவதுக் தவிர அதிலுள்ள குற்றத்தையும் பிரமேகச் சுருக்கையும் நீக்கி, இருதயப் பலவீனத்தையும் போக்குகிறது. இரத்தத்தை விருத்தி செய்கிறது; சீரண சக்தியை உண்டு பண்ணுகிறது. மாதளம் விதையை மென்று சுவைத்துச் சாப்பிடச் சீத பேதியைக் கண்டிக்கிறது. மாதளம் விதை, இந்துப்பு, மிளகு இவற்றைக் கொஞ்சமாகச் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால், பித்த சாந்தியும் பித்தத்தால் ஏற்படும் பயத்தையும் போக்கும். பிணிகளுக்கும் மாதளவிதை உபயோகப்படுகிறது. கண்ணோய்க்கு இதனைவிடச் சிறந்த மருந்து இல்லை. மிகவும் குளிர்ச்சியைக் கொடுக்கும். மெல்லிய ஆடையை மாதளஞ்சாற்றில் நனைத்துக் கண்மேல் போடக் கண்ணோய் தீரும். மகம்மதியர் நித்தியமும் கண்களுக்குத் தடவுகிற 'சுர்மா' என்னும் சாம்பல் நிறமுள்ள தூள் இவ்விதையினாலேயே செய்யப்படுகிறது.

மாதளம் பழத்தைத் தோலுடன் உரலில் போட்டு இடித்துச் சாற்றைப் பிழிந்து மிளகு சேர்த்துக் குடிப்பதால் வாந்தியும் பேதியும் நிற்கும். அதிகமாக மதுவுண்டு வெறியால் கிடப்பவர்களுக்கு இதனைக் கொடுப்பதால் வெறி தெளியும்.

சீதபேதி, அசீர்ணபேதி ஆரம்பமாகும் போது மாதளம் தோலில் ஒரு பங்கும் வெந்நீர் பத்துப் பங்குங்கூட்டி வாசனைக்காகக் கொஞ்சம் இலவங்கப் பட்டை அல்லது இலவங்கத்தூள் சேர்த்துக் கால் மணி நேரம் கொதிக்கவைத்து இறக்கி வடிகட்டிக் குளிர்ந்தவுடன் நாளொன்றுக்கு மூன்று வேளை இரண்டவுணம் வீதம் கொடுத்துவரக் குணமாகும். இரத்த பேதியினால் சங்கடப்படுகிறவர்களுக்கு இக்கியாழத்துடன் அபினி ரசம் (Laudanum) ஐந்து துளி வரையில் சேர்த்துக் கொடுக்கப் பேதி நின்றுவிடும். மாதளம் பழத்தின் தோலைச் சுட்டுக் கரியாக்கிய பொடியைக் கோதுமை அரிசி சாதத்தில் கலந்து சாப்பிட வயிற்றுவலியுடன் அடிக்கடி வெளிக்குப் போவதும் நிற்கும். இதன் தோலைச் சுட்டுப் பொடியாக்கித் தண்ணீரில் கலந்து ஆசனத்தைக் கழுவிவர மூலத்தில் இரத்தம் விழுதல் நிற்கும். மேலும், இப்

பொடியை ஆசனத்தில் தேய்ப்பதால் ஆசன அரிப்பு, மூளை மூலம் யாவும் போகும்.

மாதளம் வேரின் கியாழம் கிருமிகளை (Tapeworms) வெளிப்படுத்த மிகவும் சிறந்த மருந்து. காய்ந்து உலர்ந்துபோகாத மாதளம் வேரின் பட்டையை எடுத்து இடித்து ஒரு பங்குக்கு இருபது பங்கு சலம் கூட்டிச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வெறும் வயிற்றில் இரண்டுமணிக் கொருமுறையாக நான்குமுறை கொடுத்துப் பின்னர்ச் சிற்றாமணக் கெண்ணெய் கொடுக்க ஒரு மணி நேரத்தில் கிருமி வெளிப்படும்.

மாதளக்கியாழம், தொண்டைக் கம்மல் தொண்டை ரணம் முதலிய தொண்டையைப் பற்றின வியாதிகளுக்கு உபயோகப்படுகிறது. கியாழத்துடன் கொஞ்சம் படிகாரம் பொடி செய்து வெந்நீர் கலந்து வாய்கொப்பளித்தால் தொண்டைப் புண்ணை ஆற்றும்.

மாதளை இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கிச் சுடச்சுட ஒத்தடம் கொடுக்க வெளி மூலம் போகும். நல்ல மாதளம் பழமாக, பெரிதாக ஆறு பழங்களிலுள்ள மணிகளை உதிர்த்து, ஈயம் பூசின பாத்திரத்தில் கொட்டி, ஒரு கை அசுகா சருக்கரையைப் போட்டு 15 நிமிடம் வைத்திருந்தால் மணிகளிலுள்ள சாறு இறங்கும். அதனைத் துணியில் வடிகட்டி வைத்து மணிகளில் கொஞ்சம் தண்ணீர்விட்டு மத்தினால் கடைய, வரும் சாற்றையும் எடுத்துக்கொண்டு ஒருபடி தண்ணீர் விட்டு ஒரு வீசை அசுகா சருக்கரையைக் கொட்டி அடுப்பில் வைத்துக் காய்ச்சித் தேன் பதமாக வரும் போது கலர் பவுடர் கொஞ்சம் போட்டு, இறக்கி ஆறின பின்பு புட்டியில் ஊற்றிவைத்துக்கொண்டு தினம் காலையில் சாப்பிட்டுவரச் சூட்டைத் தணிக்கும்; பித்தத்திற்கும் நல்லது. நாவறட்சிக்கும் நல்லது. வீரிய விருத்தியையு முண்டாக்கும். இதுதான் மாதளம் சர்ப்பத்து; புளிப்பு மாதளம் சர்ப்பத்து இன்னும் விசேடமான குணங்களைச் செய்யும். பித்தாதிக்கத்தினால் உண்டாகும் தலைச் சுற்றல், மயக்கம், வாந்தி, குமட்டல் இவற்றிற்கு மிகவும் நல்லது.

மாதளம் மணிகளை உதிர்த்துத் தயிரில் போட்டுப் பச்சடி செய்வதுண்டு.

மாதளை வேர், பிஞ்சு இவற்றால் வமனமும் அதிசாரமும் நீங்கும். பழத்தினால் சூடு குறைந்து வீரிய விருத்தியுண்டாகும். இலை, காய், பூ இவற்றால் முற்கூறிய பிணிகளெல்லாம் தீரும். ஆகவே, மாதள மரத்தின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு காரியத்திற்குப் பிரயோசனப்படுவது விளங்கும்.

(நல்வழி) சகதீசசுந்தரம் பிள்ளை.

3. முட்டையில் மூன்றுபாகம் சலமும் ஒரு பாகம் கட்டிப் பொருளும் உண்டு. இந்த ஒரு பங்குக் கட்டிப் பொருளில் 12·5 சதம் பிசிதமும் (protein), 12 சதம் கொழுப்பும் (fat), 1·1 சதம் உலோகப்பொருளும் (Mineral Matter) உண்டு. அதிக அளவு காலகமும் (Nitrogen) கொழுப்பும், எரியக்காடியும் (Phosporic Acid) இருப்பதால், இது புளிப்பை உண்டுபண்ணும். இக்காரணத்தினாலேயே முட்டையை மரக்கறி வகைகளோடு, விசேடமாகக் கீரைவகைகளோடு சலந்து உண்ணவேண்டும். உரொட்டியோடே, சாதத்தோடே அல்லது இதர மாமிச வகைகளோடே முட்டையைச் சேர்த்துப் புசிப்பது சுகாதாரத்திற்குத் தவறு.

முட்டையைக் குறைந்த சிறு நெருப்பில் வேகவைக்க வேண்டும். அப்படிச் செய்யும் பொழுது முட்டை கடினமின்றி மெதுவாகவும், எளிதில் வயிற்றிலிருந்து சீரணமாகக் கூடியதுமாயிருக்கும். வேகவைத்தோ வேகவைக்காமலோ மஞ்சள் கருவை யாரும் புசிக்கலாம். நன்றாக வெந்த மஞ்சள் கரு சீக்கிரம் சீரணமாகும். ஆனால், வெள்ளைக் கரு இதர ஆகாரச் சத்துக்களும் சீரணமாக விடாமல் தடை யுண்டுபண்ணுகிறதினால் வெள்ளைக் கருவை ஆகாரமாக உபயோகிக்கக் கூடாது; விசேடமாக வயோதிகருக்கும், சிறுவருக்கும் உதவவே உதவாது.

முட்டையுணவு பொருந்ாதவர்கள் வேறு விதமாகத் தங்களுக்கு வேண்டிய சத்துள்ள பொருட்களை ஆகாரமாகத் தயாரித்துக்கொள்ளக்கூடும். பால், வெண்ணெய், தயிர், மரக்கறிகள், பழவகைகள், கூலம் (Cereals) ஆகிய இவை சத்து நிறைந்தவை. பசளை (Spinach)க்கீரையில் மூன்று அல்லது நான்கு முட்டைகளின் மஞ்சள் கருவில் அடங்கிய இரும்புச் சத்து உண்டு. ½ பயிந்து பாலில் பத்து முட்டைகளின் வெள்ளைக்கருவுக்கொத்த சுண்ணம் அடங்கியிருக்கிறது. ஒரு அவுணம் (Turnip) (ஒருவகை முள்ளங்கி) கிழங்கின் கீரையில் நான்கு மஞ்சள் கருவுக்கொத்த சுதையம் (Calcium) இருக்கிறது. —நல்வழி.

4. நன்றாகச் சுவைத்து மென்று தின்பதால் நாம் உண்ணும் உணவும் அதிகமாக நம் முடம்போடு சேரும். மாப்பொருள்களை அவசியம் நன்றாக மென்று தின்னவேண்டும். அப்படித் தின்றால்தான் வாயெச்சில் அந்த மாப்பொருளோடு அதிகமாகவும் நன்றாகவும் கலக்கும். அப்படிக் கலப்பதால்தான் மாப்பொருள்கள் நம் குருதியோடு சேரமுடியும். மாப்பொருள்கள் நாம் தின்னும்பொழுது, உலர்ந்திருக்குமென்றால், அவை அதிக எச்சிலையும் சேர்த்துக்கொள்ளும். அப்படிச் சேர்த்துக் கொள்ளுவதற்குத் தக்கதாக, அவை சருக்கரையுமாகும்; நம் முடம்பையும் நன்றாக வளர்க்கும். செரியாத உணவினால், நம்முடம்பிற்கு அவற்றைக் கழித்து வெளியே தள்ளும் சிரமமும் ஏற்படும். இப்படியாக, அதனால் பிரயோசனம் இல்லாது போவது மட்டுமல்ல, சங்கடத்துக்கும் இடமாகும். ஒரேவிதமான உணவை உண்கிறவர்கள் இருவரில் அதனைச் செரித்து உடலில் சேர்த்துக்கொள்ளுகிறவன் திடமாகவும் சுகமாகவும் வளரும்பொழுது அதனைச் செரித்துக் கொள்ளமுடியாதவன் திடமும் சுகமும் குறைந்தவனாகவும் பிணியாளியாகவுமாவான்.

பாலை உணவோடு குடிப்பதென்றால், உணவின் முடிவிலேயே குடிக்கவேண்டும். அதனை வாய்வைத்து உறிஞ்சியே குடிக்கவும் வேண்டும். அண்ணாக்க மடமடவென்று வாய்க்குள் விடக்கூடாது. (அப்படி விடுவதால், பால் குடல்போய்ச் சேரவுமே திரைந்துபோகும். செரிக்காமல் தொந்தரவுந் தரும். ப-ர்.)

நன்றாக மென்று தின்பதால், பல்லீறுகளிலும் குருதியோட்டம் அதிகமாகும். அதனால், ஈறுகளும் பலப்படும்; பற்களின் தேய்வும் குறைவும் பூர்த்தியாகி, அவைகளும் பலப்படும்.
(The Oriental Watchman) —A. E. Chappell.

---

## 9. கிராம முன்னேற்றம்: தேச முன்னேற்றம்

# கிராமச் சீரமைப்பு

H. S. M. Ishaque, Director of Rural Reconstruction, Bengal.
Bulletin No. II

முன் யோசனையுள்ளவர் எவரும் வியாதிக்குப் பரிகாரத்தைத் தேடுமுன் வியாதி இன்னதுதானென்பதை முக்கியமாக முதலிலேயே தெரிந்துகொள்ள வேண்டுமென்பதை ஒப்புவர். அதனைச் சரியாகத் தெரிந்துகொண்டால், அது நாட்பட்டதாக இருப்பினும் அபாயமாக முடியக்கூடியதாக இருப்பினும் ஒரு வேளை குணப்படுத்தக்கூடும். வியாதி இன்னதுதானென்பதைத் தவறுதலாகவே கொண்டுவிட்டால், நாம் எவ்வளவுதான் பிரயாசைப் படினும் அவ்வளவும் பயனற்றதாகவே முடியும். இதுபற்றியே, நம் நாட்டைப் பாழ்படுத்தும் வியாதியையும் அதற்கு மூலகாரணங்களாக இருப்பனவற்றையும் முன்

துண்டுப் பத்திரிகையில் (கி. தூ. மார்ச்சு இதழில் ப-ர்) விவரித்தோம்.

நம் நாட்டின் வறுமையும் சுகவீனமும் பிணிக்குறிகளேயன்றி அதன் காரணங்களல்ல; அவை, வலுத்துக்கொண்டே போவதால், காரணங்களேயும் வளர்த்துக்கொண்டே யிருக்கின்றன. என்றாலும், ஆதிகாரணங்கள் அவற்றினின்றும் வேறாகவும் தெளிவாகவும் தெரியக் கூடியனவாகவே யிருக்கின்றன. நம்மால் எவ்வளவு அழுத்தமாகச் சொல்லக்கூடுமோ அவ்வளவு அழுத்தமாக, நம் துன்பத்திற்கெல்லாம் முதல் காரணமும் முக்கிய காரணமும் நம்மவர்களுடைய அறியாமையின் திரட்சியென்றே சொல்லுவோம். அதற்கடுத்தபடியாக, எவரும் திகிலடையும்படியான நம் விளக்கமின்மையும், எல்லாம் விதிபோல் நடக்கும் என்ற நினைப்பும்; சுய நம்பிக்கையும் ஆசையும் இல்லாத் தன்மையும், இவற்றிலும் மிகுந்த கேடாக நாமும் இனத்தில் ஒருவர்தானே. இனமே கெட்டொழியும் பொழுது நாம்தான் எப்படி விருத்தியாக முடியு மென்பதைக் கொஞ்சமும் நினைத்துப் பாராமல் தன் பாட்டையும் தன் நலமொன்றையுமே கவனித்து வருதலுமாகும். நம்மை எளியவர்களாக எல்லாம் வல்ல கடவுள் வைத்திருக்கவுமில்லை; அப்படி வைத்திருக்கக் காரணமுமில்லை. வெகு காலமாக, ஞாபகத்திற்கெட்டாத காலமாக ஒவ்வொரு இனமும் அதனதன் அறிவு அதனதன் ஆசையின் வேகம் அதனதன் முயற்சியின் திடமும் தன்மையும் இவற்றிற்குத் தக்கதாகவோ செழிப்பாகவோ அல்லது வறுமையிலோ வாழ்ந்து வருகிற தென்ற பெரிய உண்மையையும் நம்முடைய ஆபத்தான அறியாமையினல் தெரிகிறேமில்லை. பணமும் செழுமையும் பிறர் கொடுத்துப் பெறத்தக்கனவல்ல. புத்திசாலிகளாயிருப்பவர்கள் தேடிப் பெற்றுக் கொள்ளக் கூடியனவே. ஒவ்வொரு இனத்தையும் சேர்ந்த ஆடவரும் பெண்டிரும் அகத்திறமையுடையவர்களாக வேண்டும்; பின்னும், அதிகமாக விருத்தியாக ஆசைப்பட்டுக் கொண்டே, அதற்கேற்ற விதமாகப் பாடுபட்டுக் கொண்டும் வரவேண்டும். இனத்தின் ஆதரவில்லாமல் தனி மனிதனே பெண்ணே விருத்தியாக முடியாது. அவனுடைய அல்லது அவளுடைய சொந்த நன்மைக்காகவும் தாயினத்திற்கு ஊழியம் செய்து வரவும் தன் சீரிய கடமையாக அதற்காகத் தியாகமும் செய்துவரவும் வேண்டும். நாம் ஒருவரை யொருவர் சார்ந்தும் ஒற்றுமையாகவும் ஒரேயமைப்பில் சேர்ந்து வேலை செய்வதிலேயே, நம் விமோசனமும் திடமும் இப்பொழுதிருக்கும் துன்பப்படுகுழியிலிருந்து மீண்டும் விருத்தியாகக் கூடிய சத்தியும் இருக்கிற தென்பதை நம்மைப் பார்த்தவர் பரிதவிக்கும்படி, நாம் உணராதிருக்கிறேம். நாம் அதனை உணர்ந்தால் மட்டுமே, விருத்திக்கான முறைகளைக் கையாளவும் முடியும்.

நம்மவர்கள் ஏழைகளாகவும் நோயுற்றும் துன்பத்தி லாழ்ந்தும் இருந்துவருவதற்குப் போதிய காரணங்களிருக்கின்றனவா வென்று சற்று யோசித்துப் பாருங்கள். மிகப் பெரிய ஆறுகள் ஓடும் இந்த அழகான மாகாணம் (வங்காளம்) செழிப்பான வயல் வெளிகளும் உயரிய குன்றுகளும் நிறைந்ததும் விரிந்த கடலில் சூழ்ந்ததுமான இந்தச் செழித்த பிரதேசம், பட்டும் தேயிலையும் சணலும் நிலக்கரியும் மரமும் இரும்பும் இவையனைத்தும் இங்கே கிடைப்பதுபோல் வேறெங்கேயும் கிடைப்பதில்லை யென்ற பெயர் வழங்கிய இந்த நாடு, தானியங்களும் காய்கறிகளும் பழ வகைகளும் மற்றும் வளந்தரும் பொருள்களும் நிறைந்த இந்த நாடு எதிலேனும் குறைவுடையதாகச் சொல்லக் கூடுமோ ? நாம் வேண்டுமென்று நினைத்தால், நாமாகச் செய்து பெற்றுக்கொள்ள முடியாத பொருளேதேனுமுண்டா ? நாம் அந்தப்பெரிய உண்மையை யுணர்ந்து, நம்மிடம் மறைந்திருக்கும் மகத்தான சத்தியை—சுயநலமே தேடுகிறவர்களாக அல்லாமல்—பிறரோடும் சேர்ந்து ஒற்றுமையாக ஒரேமனதாகச் செலுத்தினல், நம்மால் ஆகக்கூடாதது ஒன்றுமில்லை. நாம் ஒருவரையொருவர் விழுங்க முயற்சிப்பதற்குப்

பதிலாக, நாம் ஒருவரையொருவர் சார்ந்திருப்பவர்களாகவும் நம்முடைய தீவிர நன்மையும் கடமையும் நாம் ஒருவருக்கொருவர் உதவுதலிலும் பிறரோடு சேர்ந்து ஒன்று சொன்னாற்போல் வேலைசெய்தலிலும் இருக்கிறதென்பதை நாமுணர்வோமென்றால், நம் துன்பங்களெல்லாம் பழங்கதையாகப் போகாதிருக்கக் காரணமுமிராது. நமக்கு அறிவும் ஆசையும் தேடித் திரிந்து பயனடையும் முயற்சியும் நம்மிடமிருக்குமென்றால், நாம் பூமாதேவியிடமிருந்து நினைத்ததையெல்லாம் பெறவுங்கூடும். நமக்கு உண்மையில் ஆசையும் உறுதியும் இருக்குமென்றால், நம்முடைய முயற்சியை எந்தச் சத்தியும் தடுத்துவிடக்கூடியதில்லை; எந்தத் தடையும் நமக்குப் பெரிதில்லை; நம்மால் முடியாதென்று சொல்லுதற்கு ஒன்றுமேயிராது.

கிராமச் சீரமைப்பியக்கம் கற்பிக்கிற ஆரம்பப் பாடங்களில் இஃதொன்றாகும்—நாம் வறுமைப்பட்டவர்களாயிருக்கிறோமென்றால், அது பூராவாகவும் திட்டமாகவும் நாமாகச் செய்துகொண்டதே. நம்முடைய கடவுள் இரக்கமுள்ளவராக இருந்தும், தமக்குத் தாமே உதவாதவர்களுக்குத் தாமும் உதவுவதில்லையென்கிறார். நாமே நம்மை ஆக்கிக்கொள்ளுகிறபடியே நாமாகிறோம். நம்முடைய விமோசனமும், நம்முடைய கையிலும் இன்னும் கடுமையாக உழைப்பதற்கான திறமையிலும் பிறரோடு ஒன்று சேர்ந்து உழைக்கும் சத்தியிலும் பிறரோடுகூடிப் பாடுபடும் உண்மையிலும் நம்முடைய தன்னலமற்ற ஊழியத்திலும் எவ்விதத் தடைகளையும் தகர்த்தெறியும் முயற்சிகளிலும் நம்மினம் விரும்புகிறதையும் அதற்கவசியமானதையும் சேகரித்துத் தருவதில் நமக்கிருக்கும் தியாக புத்தியிலுமே அடங்கியிருக்கிறது.

நான் உங்களுக்கு ஒன்றிருக்க ஒன்றைச் சொல்லித் தப்புவழியில் செலுத்துகிறேனென்றேனும், காரியத்தைவிட்டுவிட்டுப் பக்கத்திலே செல்லுகிறேனென்றேனும் இந்த உலகத்தில் நாம் தான் பின்னடைந்தும் வறுமையால் தாக்கப்பட்டும் இருக்கிறோமென்றேனும், வானத்திலிருந்து பணமாக மழை பெய்தோ அல்லது மற்றப்படியோ நம்முடைய வறுமை நீங்கினாலொழிய நாமாக ஒன்றும் செய்துகொள்ளமுடியாதென்றேனும் நினைக்கவேண்டாம். அப்படி எதுவும் இதுவரை நடந்ததுமில்லை, இனி நடக்கக்கூடியதுமில்லையென்று நான் சொல்லுவதை நீங்கள் நம்புங்கள். நம்மைப் போலவே ஏழைகளாக, நாம் இன்று சங்கடப்பட்டுக்கொண்டிருப்பது போலவே சங்கடப்பட்டுக்கொண்டிருந்தவர்கள் மேலே விவரித்திருக்கும் திறங்களையும் குணங்களையும் பெற்று அவற்றை விருத்திசெய்துகொள்ளும் வரை தங்கள் சங்கடங்களை உதறித்தள்ளமுடியாமலேயிருந்திருக்கிறார்கள். நம் நாட்டைக் காட்டிலும் மலைக்காய்ச்சல் அதிகமாகப் பாழ்படுத்தும் நாடுகளிருந்திருக்கின்றன. அவை இருந்தது போலவே தோன்றாதவிதமாக, அந்த நாடுகளைவிட்டே அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், அப்படி அப்புறப்படுத்தப்பட்டிருப்பது இயற்கைக்கு மிஞ்சிய சத்தியாலல்ல; அவர்கள் ஒன்று சேர்ந்து உறுதியாக இருந்து முன்யோசனையோடு முயற்சி செய்து வந்ததன் பலனேயாகும். விடாது தொடர்ந்து ஒற்றுமையாகவும் உறுதியாகவும் முயற்சிக்கும் பொழுது, ஒரு நாட்டாருக்குச் சாத்தியமாகாத காரியம் எதுமேயில்லை; உண்மையும் ஆசையும் சாத்தியமாக்கித்தரக் கூடாத காரியமும் எதுவுமில்லை. ஒரு நாட்டின் செல்வம் அந்த நாட்டின் விளைவிலில்லை. அந்தச் சனங்களுடைய ஊக்கம் தானாகவே நல்ல முறையில் முயற்சிக்கும் திறமை யோக்கியதையின் அழுத்தம் இவற்றையே பொறுத்ததாக இருக்கிறது. இந்தக் குணங்களில்லாத எந்த நாடும் நிரந்தரமாகச் செழித்திருக்கமுடியாது. இவை இருந்தால் வேறு என்னதான் அசௌகரியங்களிருப்பினும், அவை தவிர்க்கமுடியாத தடையாகமாட்டா.

மன வீதியுண்டானால் இட வீதியுமுண்டு. மற்றவர்களால் செய்துகொள்ள முடிந்திருப்

பது நம்மாலும் செய்துகொள்ள முடியும். நமக்கு இப்பொழுது நிரம்பவும் வேண்டியதெல்லாம், அதிகம் பெறவேண்டுமென்ற ஆசை, உண்மையான அக்கறையோடு கூடிய ஆசை, முயற்சிக்கு அவசியமான புத்திசாலித் தனமும் விளக்கமான அறிவுமே யாகும். நம் நாட்டாரின் கேவலமான நிலைமையைப் பற்றிய உண்மையான உணர்ச்சியும், வாழ்க்கையைப் பற்றிய புதிய நோக்கும் (New out look on life) புதிய உளத்துறைச் சத்தியும் (The new psychology) கடமைகளையும் உரிமைகளையும் பற்றிய புதிய கருத்தும் வேண்டும்; சுருங்கச் சொல்லில், நம் மனமே பூராவாக மாறவேண்டும். அது தான் அவசியமாகவும் முதல் முதலாகவும் நம்முடைய நிலைத்த விருத்திக்கு உண்மையில் வேண்டியதாகும்.

(மொழி பெயர்ப்பு.) (தொடரும்)

---

**10. கதை: சரித்திரம்**

# இரண்டு அடியார்கள்

(ஒரு தால்சுடாய் கதை: தமிழ் நாட்டிற்கேற்ப மாற்றி யெழுதியது.)

## I

முன்னொரு காலத்தில் பாண்டி வள நாட்டில் புதுக்குடி என்ற சிற்றூரில் இரண்டு கிழவர்கள் இருந்தார்கள். அவர்களிருவரும் மாசி மகத்துக்குப் போய்ச் செந்தூரில் முருகனை வணங்கி வருவதாக நேர்ந்திருந்தார்கள். அவர்களில் அரசப்பன் என்பவன் பணக்காரன்; அருளப்பன் அவனைப்போல் அவ்வளவு செயலானவனல்ல.

அரசப்பன் ஆழ்ந்த கருத்தும் உறுதியுமுடையவன்; எதிலும் நிதானமாகப் போகிறவன். அவன் குடிக்கிறதில்லை; பொடி போடுவதுமில்லை. கெட்ட வார்த்தை, அவன் வாயிலிருந்து வராது. அவன் அந்தக் கிராம நாட்டாண்மையாகவும் இரண்டு முறை இருந்திருக்கிறான். அந்தக் காலமெல்லாம் கணக்குகள் வெகு ஒழுங்காகவும் இருந்தன. அவன் குடும்பம் பெரிது. இரண்டு பிள்ளைகள்; பேரனுக்கும் கலியாணமாகியிருந்தது. எல்லாரும் ஒன்றுகவே குடியிருந்து வந்தார்கள். அவன் நல்ல சுகமாக இருந்தான். நிமிர்ந்த தோற்றம் நீண்ட தாடி; அறுபது வயதிற்குமேல்தான் அவன் தாடி கொஞ்சம் நரைக்க ஆரம்பித்தது.

அருளப்பன் பணக்காரனுமல்ல, ஏழையுமல்ல. அவன் முன்னால் தச்சு வேலை பார்த்துக்கொண்டிருந்தவன். இப்பொழுது வயதாகி விட்டது. முன்போல, வேலைக்குப் போவதற்கில்லை; என்றாலும், சும்மா யிருப்பதுமில்லை. காலையிலும், மாலையிலும் இரண்டு மூன்று ஆட்டுக் குட்டிகளைப் பத்திக்கொண்டு போய் மேய்த்து வருவான். ஒரு மகன் வேலை பார்க்க அயலூர் போயிருந்தான்; ஒரு மகன் வீட்டோடிருந்தான். அவன் எவரோடும் பிரியமாகப் பேசுவான். எந்த நேரமும் புன்சிரிப்பு; ஏகதேசம் குடிப்பான்; பொடியும் போடுவான். பாட்டென்றால் அவனுக்குப் பெரும் கிறுக்கு. அவன் வீட்டிலும் அக்கம் பக்கத்திலும் சண்டை சத்த மில்லாமல் வாழ்ந்து வந்தான். ஆள் குட்டையாகக் கறுவலாக இருப்பான். சுருண்ட தாடி; வழுக்கைத் தலை.

இருவரும் செந்தில் வருவதாக நேர்ந்து சில ஆண்டுகள் கழிந்து விட்டன. அரசப்பனுக்கு ஓய்வே யிருந்ததில்லை. எந்நேரமும் ஏதாவது வேலை யிருந்துகொண்டே யிருக்கும். ஒரு வேலை முடியவும் இன்னொரு வேலையை

ஆரம்பித்துக் கொள்ளுவான். முதலில் தன் பேரன் கலியாணமாகட்டு மென்றிருந்தான்; பிறகு சின்னவன் பட்டாளத்திலிருந்து வரட்டு மென்றிருந்தான்; பிறகு ஒரு சிறு வீடு கட்ட ஆரம்பித்தான்.

ஒரு நாள் சாயங்காலம் இரண்டு கிழவரும் புது வீட்டின் பக்கமாகச் சந்தித்தார்கள். அம் மட்டில், ஒருவருக்கொருவர் நலம் வினவிக் கொண்டே ஒரு கட்டையின் பேரில் உட்கார்ந் தார்கள்.

"நாம் என்றுதான் செந்தில் முருகனைப் போய் வணங்கிவர?" என்று அருளப்பன் கேட்டான். அரசப்பன் அதற்கு முகத்தைச் சுளித்துக்கொண்டு "அடுத்த வாண்டு போகக் கூடாதா? இந்த ஆண்டில் எடுத்ததெல்லாம் எனக்குச் சங்கடமாயிருக்கிறது; நானூறு ஐந் நூறுக்குள் முடியுமென்று இந்த வீட்டு வேலை யைத் துவக்கினேன்; நானூறும் ஐந்நூறும் ஆகிவிட்டது; இன்னும் இருநூறு முந்நூறு பிடிக்கும்போலிருக்கிறது. திட்டமாக, அடுத் தாண்டில் போவோம்" என்றான்.

"இப்படி நாள் கடந்துகொண்டே போகக் கூடாது; இந்த ஆண்டிலாவது, அவசியம் போய் வர வேண்டுமென்று எனக்குத் தோன் றுகிறது. இந்த ஆண்டிற்குத்தான் என்ன குறை?" என்றான் அருளப்பன்.

"காலமெல்லாம் சரிதான்; கட்டடம் அரையுங் குறையுமாக இருக்கிறபொழுது அதனை எப்படிப் போட்டுவிட்டுப் போகிறது?" என்றான் அரசப்பன்.

"யாரையும் பார்த்துக்கொள்ளச் சொல்லி விட்டுப் போகக்கூடாதா? உம்முடைய மகன் தான் பர்த்துக்கொள்ளமாட்டானு?" என்றான் அருளப்பன்"

"அவன் எங்கே பார்க்கப்போகிறான்? ஒவ் வொருநாள் குடியும் அதிகமாகிவிடுகிறது. அவனை நம்பிப் போகமுடியாது" என்று தலை யைக் குலுக்கினான் அரசப்பன்.

"நாம் செத்துப்போன பிறகு, என்ன செய்யப்போகிறோம்? அப்பொழுது அவர்களா கத்தானே காரியங்கள் பார்க்கப் போகிறார்கள். இப்பொழுதிருந்தே அவர்கள் பார்த்துப் பழ கட்டுமே" என்றான் அருளப்பன்.

"அதுவும் சரிதான், எடுத்த காரியத்தை அரையுங் குறையுமாகவா போட்டுவிட்டுப் போகிறது?" என்று திரும்பவும் உளைந்தான் அரசப்பன்.

"எப்பொழுதும் எதாவது வேலையிருந்து கொண்டேயிருக்கும். எல்லா வேலையையுமா நாம் நினைக்கிறபடி முடித்து விடுகிறோம்?" என்று பின்னும் சொன்னான் அருளப்பன்.

"இந்தக் கட்டடத்தில் நிரம்பப் பணத் தைச் செலவழித்து விட்டேன். கோயிலுக்குப் போகிறதென்றால், வெறுங்கையாகவா போகி றது? கையில் பத்திருபது ரூபாவாவது இருக்க வேண்டாமா?" என்று கேட்டான் அரசப்பன்.

அருளப்பன் சிரித்துக்கொண்டே, "என் னிடத்திலும் பணமில்லைதான். நீ புறப்படுகிற தென்று சொல்லு; அப்படிப் புறப்படுவதற் குள் எப்படியும் பணம் வந்து சேர்ந்துவிடும்" என்று தைரியம் சொன்னான்.

அரசப்பனும் சிரித்துக்கொண்டு "எப்ப டிப் பணம் வந்துவிடும்; எங்கிருந்து கிடைத்து விடும்?" என்று கேட்டான்.

"பணம் எப்படியும் வருகிறது. அந்தக் கவலை உனக்கெதற்கு? நாம் நேர்ந்து எவ்வ ளவு காலமாகிறது? நேர்த்திக்கடனைக் காலாகா லத்தில் கழித்துவிடவேண்டாமா? எவ்வளவு காலம் இப்படிக் கடத்திக்கொண்டே போகி றது? நேர்த்திக்கடனைக் கழிக்காமல், நாம் எப் படிச் சுகமாக வாழ முடியும்?" என்றான் அருளப்பன்.

அரசப்பனும், "வாழ்வதும் இறப்பதும் நம்முடைய கையிலா இருக்கிறது? இப்பொ ழுதே—உடலும் உயிரும் திடமாயிருக்கிறபொ ழுதே போய்வந்துவிடுவோம்," என்று கடைசி யாக ஒப்புக்கொண்டான்.

## II

ஒரு வாரத்திற்குள் இருவரும் புறப்படத் தயாரானார்கள். அரசப்பனும் வழிச்செலவுக்குக் கையில் நூறு ரூபா எடுத்துக்கொண்டான். அருளப்பனுக்கு அவனுகச் சேகரித்த எழுபது ரூபாவோடு அவன் மனைவியும் மருமகளும் அவர்களிடமிருந்த பணத்தையும் கொடுத்தார்கள்.

அரசப்பன் தன் மூத்த மகனைக் கூப்பிட்டு, இந்தப் புன்செய்யில் நாற்று விதைக்கவேண்டும். அந்தப் புன்செய்க்குக் குப்பையடிக்க வேண்டும். இந்தக் கட்டடத்துக்குத் தட்டொட்டி இப்படிப் போட்டு முடிக்கவேண்டும் என்று இவ்வாறுகச் செய்யவேண்டி யிருந்த வேலைகளையெல்லாம் செய்து முடிக்கவேண்டிய மாதிரிகளையும் விவரித்துச் சொன்னான். அருளப்பன் தான் போய்வருவதாகச் சொல்லிக் கொண்டதைத் தவிர தன் மனைவியிடமும் வீட்டுக் காரியங்களை அப்படிச் செய் இப்படிச்செய் என்று சொல்லவில்லை.

அரளப்பனுக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டபிறகு வீட்டைப் பற்றிய கவலையேயில்லை. அரசப்பனோடு சண்டைபோட்டுக்கொள்ளாமல் ஊருக்குத் திரும்பிவந்து சேரவேண்டுமே என்பதுமட்டும் அவனை உறுத்திக்கொண்டிருந்தது. வழியிலே சந்திக்கிறவர்களோடும் அருமையாகவே பேசுவான். அவன் பொடிப்பட்டையை வீட்டிலே வைத்துவிட்டு வந்திருந்த போதிலும், அந்த ஞாபகமில்லாமலே இடுப்பைத் தடவிப்பார்ப்பான். எதிரே வருகிறவர்களிடம் பொடியும் கேட்பான். அவர்கள் கொடுத்தால் கொஞ்சம் நின்றே போட்டுக் கொண்டு விரைவாக நடந்து அரசப்பனையும் தொடர்ந்துகொள்ளுவான்.

அரசப்பனும் எவரிடமும் பயனில்லாத சொல் சொல்லுவதில்லை. என்றாலும், அவன் கவலையில்லாதும் இருக்கவில்லை. வீட்டில் என்னதான் நடக்கிறதோ? என்பான்; அதனைச் சொன்னேனோ இல்லையோ மகனிடம், என்று ஞாபகம் பார்ப்பான்; சொல்லிவந்ததைச் சரியாகச்செய்கிறானோ இல்லையோ என்பான். போகிறவழியில் எவனும் அவன் நிலத்திற்குக் குப்பையடித்துக்கொண்டிருந்தால், குப்பையடிக்கச் சொல்லியது ஞாபகமிருக்கிறது; குப்பையடித்தானா இல்லையாவென்று ஊருக்குத் திரும்பிப் போனதும் கேட்கவேண்டுமென்று நினைத்துக் கொள்ளுவான். மகன்தான் விவசாயத்தைச் சரியாகக் கவனித்துக்கொள்ளுகிறானோ, இல்லையோ! நாம் ஊருக்குத் திரும்பிப் போய்விட்டாலென்ன? என்றும் எண்ணுவான்.

(தொடரும்)

---

## 11. செய்தித் திரட்டு :

## அ. உழவு வாணிபம் முதலிய தொழிற் செய்திகள்

1. நமது தமிழ் நாட்டில் முக்கியமாக விளையும் பருத்தி, கம்போடியா, கருங்கண்ணி என இரண்டுவகை. இவற்றில், கம்போடியா பருத்தி முக்காலே அரைக்கால் அங்குலத்திலிருந்து ஒரு அங்குலம் வரை இழையும், கருங்கண்ணி முக்காலே வீசம், முக்காலே அரைக்கால் அங்குலம் நீளம் இழையும் உள்ளதாக இருக்கின்றன. கம்போடியாப் பஞ்சு 40-ம் நெ. நூலும், கருங்கண்ணிப் பஞ்சு 28-ம் நெ. 30-ம் நெ. நூல்களும் நூற்க உபயோகப்படுகின்றன. மேலே கண்ட இரண்டும் நீண்ட இழையுள்ள இனத்தைச் சேர்ந்தவை. இவற்றிற்கு இந்த நாட்டிலேயே போதுமான தேவை இருக்கிறது. சண்டையினால் இவற்றின் விலை அனேகமாகப் பாதிக்காதென்றே தெரிகிறது. தவிர, இந்தியாவுக்குப் புறம்பா யுள்ள வெளிநாட்டிலிருந்து, நீண்ட இழையுள்ள பஞ்சுக்கு, முன்பிருந்த வரியோடு சமீபத்தில் இராத்தல் 1-க்கு ரூ. 0-1-0 அதிக வரி விதிக்கிறார்கள். இது 784 இராத்தல்

கொண்ட பாரம் ஒன்றுக்கு ரூ. 491 போல் அதிகமாகும். ஆனதால், வெளிநாட்டுப் பஞ்சு வந்து இந்த நாட்டின் நீண்ட இழைப் பஞ்சுகளுடன் போட்டி போடுவது குறையும்.

இவற்றை யோசிக்கும்பொழுது, தமிழ் நாட்டில் விளையும் கம்போடியா, கருங்கண்ணிப் பஞ்சுகளுக்குப் போதுமான கிராக்கி யிருக்குமென்றும், விலை அனேகமாக இறங்காதென்றும் ஆனதால் கவர்ன்மெண்டார் இந்தப் பருத்தி விளையும் பூமிப் பரப்பைக் கட்டுப் படுத்தவோ அல்லது குறைக்கவோ மாட்டார்களென்றும் தெரிகிறது.

(கூட்டுறவு) —இராமசாமிக் கவுண்டர்.

2. நம்மிந்திய அரசாங்கம் குறுகிய இழைப் பஞ்சு ஐந்து இலட்சம் பேல் வாங்கத் தீர்மானித்திருக்கிறது. பருத்தியாகவும் தாழ்ந்த தரமாகவும் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் அப்படி வாங்கக்கூடும்.

(கூட்டுறவு) —G. of. India Communique.

3. சென்னைக் கைத்தறிநெசவாளர் மாகாணக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வந்த துணிகளில் ரூ. 6581 பெறுமான துணிகளைச் சேலம் வியாபாரக் காட்சிச்சாலை விற்றிருக்கிறது. சேலம் ஜில்லா நெசவாளர் சங்கங்களுக்குச் சாயம் சுமாரான விலைக்குக் கொடுத்து வருவதற்காகவும் ஷை மாகாணச் சங்கம் ஒரு சாயக்கடையும் சேலத்தில் துவக்கியிருக்கிறது.

(அக்டோபர் டிசம்பரில் நடந்திருக்கும் வேலை)

—Madras Press Communique, No. 16.

4. கைத்தறிநெசவிற்கு உதவிசெய்வதற்காக, நைசாம் அரசாங்கம் நாலு இலட்ச ரூபா ஒதுக்கிவைத்திருக்கிறது. வெளிநாட்டு நூல் வரத்துக் குறைந்ததனாலும் உள் நாட்டு ஆலைகளிலேயே அதிகமாக நூல் செலவாவதாலும் நூல் விலை ஏறுவதின் காரணமாக வேலையில்லாமல் திண்டாடுகிறவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு இந்தப்பணம் உதவும். இந்தத் திட்டத்தின் படி நூலும் சௌக்கியமான விலைக்குத் தரப்படும்; நெய்கிறதுணியையும் விற்றுத் தரப்படும். சௌக்கியமான விலைக்கு நூல் கொடுத்துவருவதற்குச் சௌகரியமாக, ஒவ்வொரு நூற்கும் ஆலையும் தாங்கள் நூற்கும் நூலில் 5 சதம் நூலை அரசாங்கத்தினிடம் ஒப்புவித்துவிட வேண்டுமென்றும் ஓர் ஏற்பாடு செய்திருக்கிறது; இப்பொழுதிருக்கும் ஏழு நெசவுத்தலங் (Weaving Centres) களோடு இன்னும் ஐந்து நெசவுத்தலங்கள் ஏற்படுத்தப் படும். அந்த இடங்களிலெல்லாம் அற்றைக் கூலிக்கு நெசவு வேலையுங் கொடுத்துவரப் படும். இப்படி நெடுகலும் செய்துவருவதற்காக, வருடத்திற்குப் பதினயிர ரூபா செலவழிக்கிறதென்றும் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

H. E. H. Nizam's Govt. P. E. No. 39.

5. நூல் வியாபாரக் கட்டுப்பாடு:- நியாயமான விலைக்குக் கைத்தறியாளருக்கு நூல் கிடைக்கும் படி செய்வதற்காக, நூல் வியாபாரத்தைக் கட்டுப் படுத்த இந்திய சர்க்கார் ஒரு திட்டம் வகுக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவில் வருடந்தோறும் 150 கோடி பவுண்டு நூல் உற்பத்தி செய்வதில் ஆலைகள் 110 அல்லது 120 கோடி உபயோகிக்கின்றன. கைத்தறிகளுக்கு 35 கோடிப் பவுண்டு தேவையாகும். தங்கள் தேவைபோக மீதியிருக்கும் நூலைத் தங்களிடம் ஒப்புவிக்கும் படி சர்க்கார் ஆலை முதலாளிகளைக் கேட்டிருக்கின்றனர். பம்பாய் ஆலை முதலாளிகள் சங்கத்தினர் இந்த யோசனையை ஆட்சேபித்திருக்கின்றனராம்.

—வர்த்தக ஊழியன்.

6. இப்பொழுது 15 லட்சம் கசம் துணி சப்ளை செய்ய ஐந்து ஜில்லாக்களில் ஏற்பாடுகள் செய்யப்படும். நெசவாளருக்கு வீண் வாய்ப் பேச்சால் செய்துவரும் சேவை போதாது. பொதுமக்கள் கிரியாம்சையில் உதவிசெய்ய வேண்டும். நெசவாளரிடையே ஒற்றுமையும் மிக அவசியம்.

—கூட்டுறவுப்பதிவாளர்.

7. அரசாங்க மருத்துவ சாலைகளுக்கு வேண்டிய துணிகள் நெசவாளர் மாகாணக் கூட்டுறவுச் சங்கம் தருவதாக இருந்தால், மற்றவர்கள் விலையைக்காட்டிலும் பத்துச் சதம் கூட இருந்தாலும் கூட்டுறவுச் சங்கத் துணியையே வாங்கவேண்டுமென்று வைத்திய இலாகாத் தலைவருக்கு (Surgeon General) சென்னை அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

—The Madras Journal of Co-operation.

8. ஆலைகளும் அனுமதிச் சீட்டுப் பெறும் வியாபாரிகளுமே (Licensed Dealers) நூல் விற்கலாமென்று ஒரு திட்டம் செய்யப்போவதாகத் தெரிகிறது. அதனால் நெசவாளர்களுக்கு எப்படி நூல் சௌக்கியமாகக் கிடைத்துவிடக்கூடுமென்று தெரியவில்லை.

—The Madras Journal of Co-operation.

9. சண்டை சப்ளை இலாகா நம்மாகாண அரசாங்கத்துக்கு இரு நூறுயிரம் (Huck-a back) துண்டுகளுக்கும் பதினாறுயிரம் கசம் (Dhosuti) துணிக்கும் நூறுயிரம் கசம் (Masari) துணிக்கும் உத்தரவு கொடுத்திருக்கிறது. அதேமாதிரியாக நம் மாகாண நெசவாளர் சங்கத்துக்கு நாற்பதினாயிரம் கசம் (Masari) துணிக்கும் ஐம்பதினாயிரம் கசம் காயங்கள் கட்டும் துணிக்கும் பத்து இலட்சம் கசம் (Grey Jaconet) துணிக்கும் மூன்று இலட்சத்துஐம்பதினாயிரம் கசம் (Domestic) துணிக்கும் உத்தரவு கொடுத்திருக்கிறது. நம் மாகாண அரசாங்கம் துண்டுகளைமட்டும் கைத்தொழிலிலாகா மூலமாகச் செய்துகொள்ளுவதென்றும் மற்ற இரண்டுவகைத் துணிகளையும் கைத்தறி நெசவாளர் சங்கத்துக்கே கொடுத்துவிடுவதென்றும் எண்ணியிருக்கிறது. சங்கம் அவற்றைச் செய்து முடித்துத் தருவதற்குச் சௌகரியமாக நாலுமாதம் அல்லது கூடிய சீக்கிரத்தில் திருப்பிக்கொடுத்து விடுவதென்ற நிபந்தனையின்பேரில் மாகாணச் சங்கத்திற்கு நூல் வாங்க நானூறுயிர ரூபா முன் பணமும் கூலிக்காக நூறுயிர ரூபா முன்பணமும் மற்ற வகைக்காக ஒரு பதினாயிரம் ரூபா முன்பணமும் கொடுப்பதென்றும் அப்படிக் கொடுப்பதை நெசவாளர்களுக்காகப் பஞ்சநிவர்த்தி வேலைகள் செய்துகொண்டிருக்கும் இடங்களில் முக்கியமாகப் பட்டுவாடா செய்யவேண்டுமென்றும் உத்தரவிட்டிருக்கிறது. —Mail.

10. கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கொடுத்து வருவதற்குச் சௌகரியமாகவும் சண்டைக்கு வேண்டிய நெசவுச் சரக்குகளைச் செய்துமுடித்துக் கொள்ளுவதற்காகவும் நம் மிந்திய அரசாங்கம் இரண்டு திட்டங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. நூல் கொடுப்பது மாகாண அரசாங்கத்தின் மூலமாகச் செய்து வரப்படும். இரண்டாவது திட்டம் சப்ளை இலாகாவோடு கலந்து மாகாண அரசாங்கம் முடிவுசெய்யவேண்டிய காரியமாகும். இந்த இரண்டு காரியங்களுக்காகவும் ஒரு தனி அதிகாரியை (Yarn Commissioners) நியமிப்பதென்று நம் அரசாங்கம் கருதுகிறது. (அப்படியே நியமித்து மிருக்கிறது. ப-ர்)

—Mail.

11. மதுரை இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு பாங்கு மூலமாக நெசவாளர்களுக்கு வேலை கொடுத்து உதவிவரவும், அப்படியே வேலைவாங்குவதற்கு இனமாகச் சங்கங்களுக்கு அதிகாரிகளைத் தரவும் மத்திய பாங்கிற்கு இதுகாரியமாகப் பணம் உதவுவதில் எதேனும் நட்டம் வருமென்றாலும் அதனை நம் மாகாண அரசாங்கம் கொடுத்துவிடுவதென்றும் ஒப்புக்கொண்டு மேல்வேலையை நடத்திக்கொண்டிருக்கிறது.

—Mail.

12. உலக மொத்தம் 60 கோடி மாடுகளிருக்க, இந்தியாவில் மட்டும் 18 கோடி மாடுகளிருக்கின்றன. உலக மொத்தம் நாலு கோடியே எழுபது இலட்சம் எருமைகளிருக்க, இந்தியாவில் மட்டும் மூன்று கோடியே நாற்பது இலட்சம் எருமைகளிருக்கின்றன. உலக மொத்தம் இருபது கோடியே முப்பது இலட்சம் வெள்ளாடுகளிருக்க, இந்தியாவில் மட்டும்

ஐந்துகோடியே முப்பது இலட்சம் வெள்ளாடுகளிருக்கின்றன. உலக மொத்தம் அறுபத்தி நாலுகோடியே தொண்ணூறு இலட்சம் செம்மறியாடுகளிருக்க, இந்தியாவில் மட்டும் நாலு கோடியே ஐம்பது இலட்சம் செம்மறியாடுகளிருக்கின்றன.

—The Allahabad Farmer.

13. இப்போதைய நிலைமையில் பர்மாவிலிருந்து அரிசி வரக்கூடியதில்லை யாதலால், நம் மாகாண உணவுப் பொருள் தேவையில் 5 முதல் 10 சதம் வரை குறைவு ஏற்படலாம். ஆகையால், எல்லாரும் உணவுப் பொருள்களைச் செட்டாகச் செலவழிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

எவரும் உணவுத் தானியங்களைத் தங்கள் தேவைக்கதிகமாக இருப்புக்கட்டி வைக்கக்கூடாதென்றும் அப்படிக் கட்டிவைப்பது ஏழைகளுக்குச் செய்யும் பெரும்பாதகமாகுமென்றும் எச்சரிக்கப்படுகின்றனர்.

—Madras Press Communique No. 25.

14. அடுத்தாண்டில் நிலக்கடலை விளைவு உள் நாட்டிற்குக்கூடக் காணக்கூடியதாயிருக்குமென்று தெரியவில்லை.

—The Madras Journal of Co-operation.

---

## ஆ. கிராம முன்னேற்ற தலதாபன அரசாங்கச் செய்திகள்

1. வட ஆற்காடு சில்லா சவடி மலையைச் சேர்ந்த இரண்டு கிராமங்களில் அரசாங்க உதவியோடு கோழிகள் வளர்க்கப்படுகின்றன. அமெரிக்கன் ஆற்காட்டு மிசன் ஒரு கோழிக் கண்காட்சியும் நடத்தியது. அரியப்பாடி கிராமத்தில் ஒரு சிறு கோழிப்பண்ணையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

[அக்டோபர் டிசம்பர் வேலை]

—Madras Press Communique No. 16.

---

## இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. நம் நாட்டின் குழந்தைகளின் வாழ்விற்கும் அவர்கள் மூலம் நாட்டின் எதிர்காலத்திற்குமே அடிப்படையாக இருக்கும் ஆசிரியர்களுக்குத் தேசிய இலட்சியப்படி பயிற்சியளிப்பதின் அவசியத்தை உணர்ந்து வித்தியாலயத்தில் காந்தியடிகளின் பெயரால் உயர்தரப் போதனை முறைப் பாடசாலை ஒன்று நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அது அடுத்த பள்ளியாண்டில் ஆரம்பமாகும். அதுவும் வித்தியாலயத்தைப்போலவே குருகுல முறையில் நடைபெறும். சேர விரும்புகிறவர்கள் குறைந்தது ஆறும் பாரமாவது தேறியவர்களாக இருக்கவேண்டும். விண்ணப்பம் நாளிது ஏப்பிரல் மாதத்திற்குள் போட வேண்டும். முழு விபரங்கள் காரியதரிசி இராமகிருட்டின வித்தியாலயம் தபால் நிலையம், கோயம்புத்தூர் சில்லா என்கிற விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

வித்தியாலயம் அமைச்சர்

2. சங்கத்தின் 35வது விதி, முதல் உட்பாராவின் முடிவில் 'சங்கவிதிகளைத் திருத்துவதென்றால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் காலாகாலத்தில் சுற்றறிவிப்பின் மூலமாகவேனும் மற்றப்படியேனும் தகவல் கொடுக்கவேண்டும்; இன்னவிதமான திருத்தம் கோரப்படுகிறதென்பதும் அதில் தெளிவாகக் காணவேண்டும்.

—The Madras Journal of Co-operation.

3. கூட்டுறவுச் சங்க விதிகளில் 26வது விதி திருத்தியமைக்கப்படுகிறது. பாங்கு நிருவாக சபையில் தனி நபர்கள் இத்தனை பேர்களிருப்பதென்பதையும் அவர்களில் பாங்கில் தொகை போடுவோர் (Depositors) கால்வாசிக்குக் குறையாதிருக்க வேண்டியதையும் தனி நபர் இத்தனை பங்குகள் எடுத்திருக்க வேண்டுமென்பதையும் பதிவாளர் பாங்கு நிர்வாக சபையைக் கலந்து நிர்ணயிப்பார். இருப்புத் தொகை போட்டிருப்பவர்களைத் தேர்ந்தெ

டுக்காது போனாலும் பதிவாளர் தன் நியமனத்தால் அந்தத் தானங்களைப் பூர்த்தி செய்யலாம். அப்படி நியமிப்பதற்குரியார் கிடைக்காத பொழுது அந்தத் தானம் காலியாக வைத்திருக்கப்படும். இருப்புத் தொகைக்காக நிருவாக சபையில் அங்கத்தினராக இருப்பவரின் இருப்புத் தொகைப் பதிவாளர் குறிப்பிட்டிருக்கும் அளவுக்குக் குறையும்பொழுது அவர் தம் தானத்தை இழந்து விடுவார்.

—Fort St. George Gazettee.

4. கலைக்கப்பட்ட சங்கங்களின் மீதித் தொகை: சென்னை அபிவிருத்தி இலாகாதார் வெளியிட்ட 6-1-1942 தேதிய 37-ம் நெம்பர் அறிக்கையின் சாரமாவது:—

கூட்டுறவுச் சங்கச் சட்டம் XIV வது விதியின் 3-வது உபவிதியில் (a) பிரிவின் (1) வது உட்பிரிவுக்குப் பதிலாக அடியில் கண்ட உபபிரிவை அமைத்துக்கொள்க. 1. மிச்சத்தொகையானது, கலைக்கப்பட்ட சங்கத்தின் மகாசபைக் கூட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்டதும், பதிவாளர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு பொதுநலகாரியத்திற்கு உபயோகப்படுத்தவேண்டும். அவ்வித காரியத்துக்கென அறவகம் (Trust) ஏற்படுத்துவதற்கும் அதற்காகச் சங்க மகாசபையைப் பழைய அங்கத்தினர்களிடையோ, இதரர்களிடையோ அல்லது பழைய அங்கத்தினர்கள் இதரர்களிடமிருந்தோ, ஒரு அறவர் (Trustee) அல்லது பல அறவர்களை நியமிக்கக் கோருவதற்கு முடிவு கட்டுபவருக்கு (Liquidator) அதிகாரமுண்டு. மகாசபை ஒரு அறவர் அல்லது பல அறவர்களைத் தெரிந்தெடுத்ததானது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லாமற் போனாலே முடிவுகட்டுபவர் தாமாகவே ஒன்று அல்லது பல அறவர்களை ஏற்றபடி நியமிக்கலாம். அந்த அறவரோ அல்லது அறவர்களோ பதிவாளர் அவர்கள் குறிப்பிடுகிறபடி ஒரு பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். இந்த உபபிரிவின் கீழ் ஏற்படுத்தப்படும் அறவகமானது 1882-ம் ஆண்டு இந்தியன் அறவகச்சட்ட விதிகளின் படி நிர்வகிக்கப்பட வேண்டும்.

—Fort St. George Gazettee.

5. கடல் கடந்தும் ஊழியம் பார்க்க இந்தியச் சேனைச் சட்டத்தின்படி வேலைக்கமர்ந்திருப்பவர்கள் தங்கள் பிள்ளைகளை உதவியில்லாமல் படிக்கவைக்க முடியாதென்றிருந்தால், அது விவரத்திற்கு, சப். மாசிதிரேட் அல்லது துணைத் தாசில்தாருக்குக் (Deputy Tashildar) குறையாத நிலவரி அதிகாரியினுடைய ஆதாரவுச் சீட்டைத் (Certificate) தாக்கல் செய்தால், அடியிற் கண்ட சௌகரியங்கள் செய்யப்படும்.

(1) எந்தக் கல்விச்சாலையில் படித்தாலும், பள்ளிச் சம்பளம் கொடுக்கவேண்டியதில்லை.

(2) ஆரம்பப் பள்ளியிலும் உயர்தரப் பள்ளிப் பிரதமஇலாகாவிலும் படிக்கும் பையன்களுக்குப் புத்தகங்கள் முதலியனவற்றிற்காக ஐந்து ரூபாவரைக்கும் உயர்தரப் பள்ளியில் முதல் பாரம் முதல் மூன்றுவது பாரம் முடியப் படிக்கும் பிள்ளைகளுக்குப் பத்து ரூபா வரைக்கும் நாலாவது பாரம் முதல் ஆறுவது பாரம் முடியப் படிக்கும் பிள்ளைகளுக்கு இருபது ரூபா வரைக்கும் இண்டர்மீடியட் வகுப்புக்களில் படிக்கும் பிள்ளைகளுக்கு நாற்பது ரூபா வரைக்கும் பி. ஏ முதலியபட்டம்பெறும் வகுப்புக்களில் படிக்கும் பிள்ளைகளுக்கு ஐம்பது ரூபா வரைக்கும் மற்றத்தொழிற் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் படிக்கும் பிள்ளைகளுக்குப் புத்தகங்களுக்காக எவ்வளவு செலவாகுமோ அவ்வளவும் இனாமாகக் கல்வியிலாகா அதிகாரிகளால் கொடுக்கப்படும்.

(3) உயர்தரப் பள்ளிவகுப்பில் சம்பளமில்லாமல் படிக்கும் பையன்கள் பரிட்சைக்கும் கட்டணம் கட்டவேண்டியதில்லை.

சம்பளமில்லாமல் படிக்கவைப்பதால் நட்டமடையும் சொந்த நிருவாகக் கல்விச்சாலைகளுக்குக் கல்வியிலாகாத் தலைவர் அந்த நட்டத்தையும் ஈடுசெய்வார்.

—Press Communique No. 15.

6. பின்னடைந்த ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களின் படிப்புக்காகவும் முசுலீம் மாணவர்களின் படிப்புக்காகவும் உயர்தரப் பள்ளிகளில் ரூ. 10000 மும், மத்திய பள்ளிகளில் ரூ. 5000 மும் உதவிச் சம்பளமாகக் கொடுக்கப்படும். பொதுவாகவும், ஏழை மாணவர்களுக்கு ரூ. 5000/- செலவிடப்படும்.

—Mysore Information

## ௬. கூட்டச் செய்திகள் : தீர்ப்புக்கள்

1. சாம்பிராச்சிய விவசாய விசாரணைச் சங்கத்தின் ஆலோசனைக் கழகச் சிபார்சுகள்:

சண்டைக் காலத்தேவைகளை முன்யோசனையாக விளைவித்துக்கொள்ளவேண்டிய அவசரத்தை உத்தேசித்துக் கீழே காணும் சிபார்சுகள் செய்யப்படுகின்றன.

அ. ஒவ்வொரு உணவுத் தானியத்துக்கும் அந்தந்தப் பிரதேசத்துக்குத் தக்கபடியாக நல்ல விலைக்கு உத்தரவாதம் செய்து தரவேண்டும்.

ஆ. உத்தரவாத விலைக்கு உணவுத் தானியங்கள் சப்ளைசெய்ய முன் வருபவர்களுடைய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இ. அரசாங்கச் செலவில் உணவுத் தானியங்களைக் கட்டிவைக்க இடவசதிசெய்து தரவேண்டும்.

ஈ. விதைக்கும் முன்னதாக, விதைத் தானியங்கள் மலிவான விலைக்குத்தரவேண்டும்.

உ. தண்ணீர்ப் பாசனத்துக்காகக் கிணறுகள் வெட்டிக் கட்டுவதற்கும் வானவாரிக் காடுகளுக்குச் சுற்று வரம்புகள் கட்டுவதற்கும் பணம் உதவவேண்டும்.

ஊ. சமுசாரிகளுக்குப் போதிய உரங்கள் கொடுக்கவேண்டும், அல்லது போதிய உரங்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

எ. உணவுப்பொருள் விளைவை அதிகப்படுத்துவதற்காகப் பிரசாரம் தீவிரமாகச் செய்து வரவேண்டும்.

ஏ. இருப்புப் பாதை முதலிய வசதிகள் விதை, உரம், உணவுத்தானியங்களுக்கும் மற்றவற்றிற்கும் முன்னதாகத் தரவேண்டும்.

ஐ. சுதேச இராச்சியங்களுக்கும் மாகாணங்களுக்கும் வேண்டிய உதவி செய்யவேண்டும்.

ஒ. கோடை சாகுபடியில் அதிக விளைவைப் பெறுவதற்கு என்ன செய்யவேண்டுமென்பதைத் தீர்மானிக்க ஏப்பிரலில் மாகாணச் சுதேச இராச்சியப் பிரதிநிதிகளடங்கிய மாநாடு ஒன்று கூட்டவேண்டும்.

—Mail.

2. ஷை ஆலோசனைக்கழகம், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விவசாய இலாகா அதிகாரிகள் மேற் பார்வையில் நடப்பு வருட முடிவிற்குள் ஏழாயிரத்தைந்நூறு ஏக்கரில் நல்ல விதைகளை விருத்தி பண்ணுவதென்றும் அடுத்தவருடத்தில் மூன்று இலட்சம் ஏக்கரில் அப்படிச் செய்வதென்றும் நம் மாகாணத்திற்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறது.

—Maii.

### முத்தமிழ் மாநாடு, மதுரை.

3. நிகழும் 1942-ம் வருடம் ஏப்பிரல் மாதம் 20, 21, 22 தேதியில் முத்தமிழ் மா நாடு (இயல்-இசை-நாடகம்) மதுரையில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. இயல் மாநாட்டிற்கு இராமநாதபுரம் இராஜா சேதுபதி அவர்கள் திறப்பாளராகவும், சுவாமி விபுலாநந்தா அவர்கள் தலைவராகவும், இசை மாநாட்டிற்குச் செட்டி நாட்டரசர் உயர்திரு அண்ணாமலை செட்டியாரவர்கள் திறப்பாளராகவும், திருவனந்தபுரம் இசைச் செல்வர் திரு. தி. இலட்சுமண பிள்ளை அவர்கள் தலைவராகவும், நாடக மா நாட்டிற்கு திரு. தி. ச. சீனிவாசய்யங்கார் அவர்கள் திறப்பாளராகவும், இராவ் பகதூர் ப. சம்பந்த முதலியார் அவர்கள் தலைவராகவும் இருக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். திருவாட்டி, மீனாம்பாள் சிவராசு அவர்கள் மீனக்கொடியையும், கான் பகதூர் கலிபுல்லா சாகிப் பகதூர் அவர்கள் தமிழ்க்கொடியையும் ஏற்றிவைப்பார்கள்.

4. கைத்தறி நெசவுத் தொழிலாளர் சிறப்பு மாநாட்டில் நிறைவேற்றிய சில தீர்மானங்கள்.

(1) இம் மாகாணத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின்பரிதாபகரமானநிலைமையைப் பற்றியும் கைத்தறித்தொழிலின் ஆதரவற்ற நிலைமையைப் பற்றியும் இம்மாநாடு பெரிதும் வருந்துவதோடு அரசாங்கம் அவ்வகையில் கைத்தறித் தொழிலாளரையும் கைத்தறித் தொழிலையும் பாதுகாக்க ஏற்றுக்கொள்ளாவிட்டால், எல்லாக் கைத்தறி நெசவாளர்களும் ஒரே மொத்தமாக அழிய நேரிடுமென்பது பற்றியும் அஞ்சுகிறது. ஆதலால் மத்திய அரசாங்கத்தாரை அதற்குரிய பரிகாரங்களை உடனே தேடுமாறு இம்மாநாடு வேண்டுகிறது.

(அ) 60-ம் நெம்பருக்குக் குறைந்த நெம்பர் நூலால் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணிகளை ஆலைத்துணிகள் பாதிப்பதால் 60க்குக் கீழ் 18 அங்குல அகலத்திற்கு மேற்படாத துணிகளை ஆலைகள் தயாரிக்கக்கூடாதவாறும் அத்தகைய சரக்குகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யாதபடிக்கும் அரசாங்கம் தடுக்கவேண்டும் என்றும்

(ஆ) 60-ம் நெம்பருக்கு மேற்பட்ட நூலால் தயாரிக்கப்பட்ட ஆலைத்துணிகள் கைத்தறித் துணிகளைவிடக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டால், அதற்குத்தக்கபடி எதிர் வரியும் இறக்குமதி வரியும் போடவேண்டும் என்றும்

(இ) நிரந்தர ஆலை விலைக்கு நூல்களை நெசவாளருக்கு வியாபாரிகள் விற்கும்படி மாகாண அரசாங்கம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும்

(2) மலாய் நாடு, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்குக் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி நின்றுவிட்டதால் வேலையில்லாமல் சங்கடப்படும் கைத்தறி நெசவாளர்களுக்குச் சென்னை அரசாங்கத்தினர் சேலத்திலும் இன்னும் சில ஜில்லாக்களிலும் உதவிசெய்ய முன் வந்திருப்பதை இம் மாநாடு பாராட்டுகிறது. ஆனால், அரசாங்கத்தினர் செய்யும் உதவி போதியதாக இல்லை. அவ்வுதவியும் நிதானித்துச் செய்யப்படுகிறது. ஆகையால், அரசாங்கத்தினர் கைத்தறி நெசவாளர் வேலையற்றிருக்கும் எல்லா இடங்களிலும் உடனே உதவி செய்தல் வேண்டுமென இம் மாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

(3) மருத்துவசாலை, சர்வே இலாகா முதலிய சிவில் தேவைகளுக்கு வேண்டிய துணிகட்குக் கைத்தறி நெசவுத்துணிகளையே உபயோகித்துத் தங்கள் ஆதரவைக் காட்ட வேண்டுமென்று இம் மாநாடு சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(4) பட்டாளத் தேவைகட்கு வேண்டிய துணி முதலியன கைத்தறி நெசவாளரிடமிருந்து பெறும்படி இம்மாநாடு வேண்டுகிறது.

(5) கைத்தறி நெசவுக்கு உபயோகமாகும் பருத்தி, நூல் முதலிய பொருள்களுக்கும் வேலைப்பாடு தீர்ந்த துணிகளுக்கும் குறைந்த இருப்புப் பாதை கட்டணம் விதிக்குமாறு இருப்புப் பாதை அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(6) எல்லாக் கூட்டுறவு நாணயச் சங்கங்களும், கைத்தறி நெசவுத்துணிகளையே வாங்கி விற்க வேண்டுமென்று உத்தரவு செய்யுமாறு இம் மாநாடு கூட்டுறவுத் தானியச் சங்கங்களின் பதிவாளரை வேண்டிக் கொள்ளுகிறது.

7. (a) கைத்தறித் துணிகளைப்பற்றி நாடு முழுதும் பிரசாரம் செய்வதற்காக ஒரு கழகத்தை நியமிப்பதென்றும், அக்கழகத்தார் கைத்தறித் துணிகளையே மக்கள் வாங்கவேண்டுமென்று வற்புறுத்திப் பேச ஊர் தோறும் கூட்டங்களை ஏற்பாடு செய்யவும், கைத்தறித் துணிக் கண் காட்சிகள், விற்பனைக் கூடங்கள் முதலியன நடத்தவும் வேண்டுமென்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது.

(b) சென்னை அரசினரும் இந்திய சர்க்காரும் கைத்தறிப் பிரசாரம் நன்கு நடைபெறுவதற்காக ஆண்டு தோறும் ஒரு பெருந் தொகையை ஒதுக்கிவைத்து அதனை இந்தக் கழகத்தாரிடம் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறது.

(8) சாதிபேதவித்தியாசமின்றிச் சென்னை நகராண்மைக் கழக அதிகாரிகள் சென்னை நகரிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு உடனே உதவி செய்தல் வேண்டுமென இம் மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

5. கூட்டுறவுச் சட்டத்தின் 51-வது பிரிவு சென்னை உயர் நீதி மன்றத் தீர்ப்பு-கனம் நீதிபதி குப்புசாமி ஐய்யர்.

(C. R. P. 1134·40)

பாங்கின் வேலை பார்க்கும் பொழுது தமக்குச் சேரவேண்டிய பிராவிடெண்ட் தொகையும் பிரயாண பத்தாவும் பாக்கி நின்றதாக, வாதி தம்மை வேலையிலிருந்து நீக்கிய பிறகு கோர்ட்டில் தாவா தாக்கல் செய்தார். இது பற்றி வாதி, கோர்ட்டு ஏறுவதற்குக் கூட்டுறவுச் சட்டத்தின் 51 வது பிரிவு இடங்கொடுக்கவில்லை.

—கூட்டுறவு.

## அ॰ உழவு வாணிபம் முதலிய தொழிற் குறிப்புக்கள்

1. கரும்புக்கு அடியிற் கண்ட உரச் சேர்க்கை தரக்கூடிய பலன்கள் இன்னின்ன வெனப் பல ஆராய்ச்சிகளிலிருந்து தெரிந்தபடி கீழே குறிக்கப்படுகின்றன :

காலகம் :—அடித்தூர் பெரிதாகும்; தோகைகள் அதிகமாகும்; கரும்பும் அதிக உயரமாக வளரும்; உலர்ந்த பொருள் (Dry Matter) கரும்பில் சேருவதை அதிகரிக்கும். தோகைகளின் கிரகிக்கும் சத்தியும் அதிகமாகும்; ஆனால், அவற்றின் உயிர்ப்புச் சத்தி (Respiration) மூச்சுவாங்குதலும் விடுதலும் ஆரம்பத்தில் மட்டும் அதிகமாகும். சருக்கரை அதிகமாக உண்டாகும். ஆனால், சாறு அவ்வளவு சுத்தமாக இராது.

எரியம் :—தோகைகளின் எண்ணிக்கை குறையும்; அடித்தூரின் சுற்றும் குறையும்; சத்துப் பொருள்கள் சேருவதும் குறையும். உயிர்ப்புச் சத்தி முன் பாதியில் மட்டும் அதிகரிக்கும்.

சாம்பர உப்பு:—சத்துப்பொருள் சேருவது உயிர்ப்புச் சத்தியும் முதற் பாதியில் அதிகரிக்கும்; பிற்பாதியில் குறையும்; ஆனால், சாற்றின் சுத்தம் அதிகரிக்கும்.

—The Madras Journal of Agriculture.

2. தக்கைப்பூண்டு விதை எடுக்கும் விதம்:—நாற்றங்கால் உழுவதுபோல நிலத்தை உழுது பரம்புப் பலகையினால் சமப்படுத்தி ஏகராவுக்கு 3 அல்லது 4 மரக்கால் விதைகளைத் தெளிக்க வேண்டும். விதை தெளித்தவுடன் தண்ணீரை இஞ்சப்போட்டுச் செடிகள் 6 அல்லது 7 அங்குலம் உயரமானவுடன் ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 4 அல்லது 5 மாதங்களில் காய்கள் காய்த்தவுடன் செடிகளின் மேல் பாகத்தை வெட்டி, போர் போட்டு, அடித்து விதை எடுக்கலாம். தழை எருவுக்காகச் சாகுபடி செய்யும்போது ஏகருக்கு 5 மரக்கால் வீதம் விதைக்கவேண்டும். வயலில் மெழுகு பதமாய் ஈரம் இருக்க வேண்டும்.

—மிராசுதார்.

3. கொம்புகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை; வாட்ட சாட்டமாகவும் இருப்பதில்லை. பற்பல வளைவிலும் கனத்திலும் நீளத்திலுமே அவை கிடைக்கக்கூடுமாதலால், அவற்றில் செய்யக்கூடியவற்றைச் செய்வதற்கு எந்திரமும் உதவாது. கைகளாலேயே செய்தாகவேண்டும். மூன்று மாதத்தில் அவற்றில் செய்யக்கூடியவற்றைச் செய்யவும் படித்துக்கொள்ளலாம். சாதாரணமாக வீட்டிலேயே இருந்து எல்லாரும் சிறுவர் சிறுமியரும் முதியோரும் செய்து வரலாம். அதற்கு வேண்டிய சிறு அரம்பம் முதலியன வாங்க 20 ரூபாவுக்கு மேலும் வேண்டியதில்லை. பொத்தான் கைப்பிடி சீப்பு முதல் பலவேறு வகைகள் அவற்றில் செய்யலாம்.

—வர்த்தக ஊழியன்.

---

## ஆ॰ கிராம முன்னேற்றக் குறிப்புக்கள்

எவ்வித கோழைத்தனத்தாலும், உண்மை பேதத்தாலும், எம் நகருக்கு அவமானம் ஏற்பட விடோம். துன்புறு தோழரைத் துயருற விடோம். தனிமையாகவும் பிறரோடும் நகர நன்மைக்காகப் போராடுவோம்—தூய்மையையும் நாடுவோம். நகரப் பிரமாணங்களை மதித்துக் கைக்கொள்ளுவோம். பெரியோருங் கைக்கொள்ளப் பிரயாசையெடுப்போம். நகரக் கடமைகளையும் உரிமைகளையும் பற்றிய பொதுசன நல் அபிப்பிராயத்தை உருவாக்குவோம். எந்நிலையில் இந்நகரைக் காண்கிறோமோ அந்நிலையிலும் அதிக உயர்வாய், அதிக அழகாய், அதிக மேன்மையாய் உய்வுறச் செய்வோம். (வித்தியாதனம்) —Athenians' Pledge.

---

# ௩. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனுமுறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

1. நம் தாய் மொழியாகிய தமிழ் இன்ன காலத்தில் தோன்றியதென்று வரையறுக்க முடியாத அத்துணைப் பழமை வாய்ந்ததாகும். ஏறக்குறைய இரண்டாயிர ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களையும், அவற்றினும் முந்தியதாகிய தொல்காப்பியத்தையும் வைத்து நோக்குமிடத்துப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பே தமிழ் உயரிய நிலையை அடைந்துள்ளமை புலனாகின்றது. தமிழ் மிக்க இனிமையுடைய மொழியென்றும், இலக்கண வரம்புடைய மொழியென்றும் தொன்றுதொட்டுப் பலராலும் பாராட்டப்பெற்று வருகிறது. பழைய புலவர்கள் தமிழ்மொழியைக் குறிக்குமிடத்தெல்லாம் அதன் பெயரை வாளாகூறாது, செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், மென்றமிழ், இன்றமிழ் என்று இவ்வாறாக யாதேனும் ஓர் சிறந்த அடைமொழி கொடுத்து வழங்கி வந்திருக்கின்றனர். கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாடர் தமது இராமாயணத்தில் அயோத்தி நகரைக் குறிக்குமிடத்தே, "செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்றமிழிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞரனைவரும் வடநூன் முனிவரும் புகழ்ந்தது" என்று பாடியுள்ளார். இதில் எவ்வளவு அடைமொழிகளால் தமிழ் சிறப்பிக்கப் பெற்றுள்ளதென்பதனைப் பாருங்கள், குமரகுருபரர் என்னும் புலவர் தாமியற்றிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில்

"கலைப்பால் நிறைந்த முதுக்குறைவிற்
கல்விச்செல்வர் கேள்விநலம்
கனியக்கனிய அமுதூறும் கடவுள்
மறையும் முதற் சங்கத்
தலைப்பாவலர்தீஞ் சுவைக்கனியும்
தண்டேன் நறையும் வடித்தெடுத்த
சாரங்கனிந்தூற் றிருந்தபசுந் தமிழும் நாற"

என்று கூறுகின்றார். தீஞ்சுவைக் கனியாம்! தண்டேன் நறையாம்! அவற்றை வடித்தெடுத்த சாரமாம்! அது கனிந்து ஊற்றிருந்த பசுந் தமிழாம்! தமிழ் என்றவளவில் இன்ப வுணர்ச்சியானது அவருள்ளத்தே பொங்கித்ததும்பி வழிந்திருப்பதனை நோக்குங்கள். பழைய புலவர்கள் இருக்கட்டும். நம்மனோர் கண்முன் விளங்கிய கவியாகிய சுப்பிரமணிய பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்" என்று பல மொழிகளோடு ஒத்து நோக்கியறிந்த உண்மையை உரைத்துளாரன்றோ? தமிழ் இங்ஙனம் இனிமை யுடையதா யிருத்தலாலன்றோ தமிழ் என்ற சொல்லுக்கே இனிமையென்ற பொருளும் உளதாயிற்று.

திருக்குறள் என்னும் தெய்வச் செழுந்தமிழ் மறையானது தமிழர் தனி நாகரிகத்தின் ஒப்பற்ற அடையாளம். நாம் அறியவேண்டும் பொருளனைத்தையும் எளிதில் அறியுமாறு திரட்டித் தந்து நமக்கு எய்ப்பினில் வைப்பாக விளங்குவது. சிலப்பதிகாரம், சிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம் முதலிய காப்பியங்களோ ஒன்பான் சுவையும் பெய்துவைத்த சுவைப்பெட்டகங்கள். தமிழர் தம் தாய்மொழியிலுள்ள இவையனைத்தையும் கற்றுக் களிகூருங்காலமே தமிழ்நாடு உயர்நிலை யடையுங் காலம்.

(தமிழ்ப்பொழில்) —வேங்கடசாமி நாட்டார்.

2. தமிழின் தூய்மை கெடாது வளர்த்தல்:— தமிழ் பிறமொழியின் உதவியின்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்த உயர் தனிச் செம்மொழி. சிலர், தமிழ் பிறமொழிக்கலப்பால், வளர்ச்சியடையுமெனக் கூறித் தமிழில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு அயல் மொழிச் சொற்களைப் பேச்சிலும், எழுத்திலும் கலப்பர். மணிப்பிரவாள நடையே சிறந்ததென்பாரும் உண்டு. இக்கொள்கைகளால், தமிழ்மொழி தன் தனிமை யிழந்து உருவழிந்து ஒழியுமேயன்றி வளராது. அயல் மொழிக் கருத்துக்களை எடுத்தாளும்பொழுது, இன்றியமையா இடங்களில் இடுகுறியாகவுள்ள பெயர்களைத் தமிழொலிக்குப் பொருத்தமாக எடுத்தெழுதிக் கொள்ளலாம். மொழிபெயர்க்கக்கூடிய சொற்களைத் தமிழிலேயே ஆக்கிக் கொள்ளல் வேண்டும்.

3. தமிழ்ப் புலவர்கள், உயிரினும் மானமே சிறந்ததெனக் கூறும் தமிழர் குடியிற் பிறந்திருந்தும் அவர்கள் தம்மை எந்தவிடத்திலும் தாழ்வுபடுத்திக்கொள்ளுதல் தகாது. செல்வத்திற்சிறந்த சீமானாயினும், அவனிடம் கைகட்டி

[...] இருக்கலாம்; என்றாலும், அவள் ஒரு நல்ல தாயாக இல்லாவிட்டால், அவள் தன் கடமையைச் செய்தவளாகமாட்டாள்; அந்த அளவில் அவள் தோல்வியுள்ளவளாகவே கருதப்படவேண்டும். ஏனெனில், ஒரு தாயின் முதற் கடமை கடவுள் தனக்குக் கொடுத்த பிள்ளைகளை நன்றாக வளர்ப்பதேயாகும்.

உலகத்தில் நல்லோர் பெரியோர் என்று பெயர் பெற்ற மக்களுடைய சரித்திரத்தை எடுத்து ஆராய்ந்து பார்க்கையில், அவர்களுடைய பெருமைக்கு ஆதி காரணமாகவும், அடிப்படையாகவும் இருந்தது, பொதுவில் அவர்கள் தாய்மாரே என்று தெரிய வரும். நல்ல தாய்மாருள்ள வீடுகளிலிருந்துதான் நல்ல பிள்ளைகள் வருவார்கள்.

அனேக தாய்மார் குழந்தைக்கு யுக்த வயதுக்குப் பிறகே நற்குணம் துர்க்குணம் என்பன ஏற்படுமென்று எண்ணுகிறார்கள். இது சரியல்ல. குழந்தைக்கு ஆறு வயதாகு முன்னேயே அவை ஏற்பட்டு விடுகின்றன. அதாவது, குணத்தின் அடிப்படையெல்லாம் போட்டாகிவிடுகின்றன. குழந்தையின் மனசு இள மனசு. அதிலே தாயின் சுபாவமும் ஒழுக்கங்களும் இலேசாகப் பதிந்துவிடுகின்றன. அப்படிப் பதிப்பதுதான் தாயின் கடமை. இந்தக் கடமையைத் தாய்க்குப் பதிலாக வேறெவரும் செய்ய முடியாது. செய்ய விடவுங் கூடாது. குழந்தையின் குணத்துக்கு அடிப்படை போடுவதும் தாயின் கடமை. அது கடவுள் அவளுக்குக் கொடுத்த ஓர் உன்னத சிலாக்கியம், பொறுப்பு. தாய் போட்ட அடிப்படையைக் குழந்தை பிற்காலத்தில் இலேசிலே அழிக்கவோ குலைக்கவோ முடியாது. போட்டது போட்டதே. அவன் தனது கல்வி யறிவினாலும் நாகரிகத்தினாலும் சகவாசத்தினாலும் சிற்சில [...]காள்ளலாம். [...] அடிப்படை மாத்திரம் [...]டியே யிருக்கும்.

இதைப் பெற்றோர் உணர வேண்டும். ஆனால், உணருகிறார்களில்லை. குழந்தை வாலிபத்திலே துர்ச் சகவாசம் செய்து ஒழுக்கங் கெட்டுத் திரிந்தால், அவர்கள் அவனுக்குப் படித்துக் கொடுத்த உபாத்திமாரை நொந்து கொள்ளுவார்கள், மதக் குருக்களை நொந்து கொள்ளுவார்கள்; தங்களை மட்டும் நொந்து கொள்ள மாட்டார்கள். நாம்தானே குழந்தையினுடைய குணத்துக்கு அடிப்படை போட்டோம்; உபாத்திமாரும் குருக்களும் மேல் கட்டடத்தை எழுப்பினார்கள்; அடிப்படையிலே கோணல் இருக்கும்போது, நாம் அவர்களை நொந்து கொள்ளுவதிலே என்ன பயன் என்ற புத்தி அவர்களுக்கு வராது.

ஆகையால், பெற்றோர் குழந்தையினுடைய முதலில் ஆறு ஆண்டின் முக்கியத்தை நன்றாக அறிய வேண்டும். அதுதான் குணத்துக்கு அடிப்படை அமைகிற காலம். குழந்தைக்குப் பகுத்தறிவு உண்டாகட்டும், யுக்த வயதுவரட்டும் என்று காத்திருக்கக்கூடாது. உபாத்திமார்களும் கோவிற் குருக்களும் பார்த்துக் கொள்ளுவார்கள் என்றும் சும்மாவிருக்கக் கூடாது. குழந்தை மனசு எப்பொழுதும் இளசாக இருக்காது. அது சீக்கிரத்தில் கெட்டியாகி விடும், கல்லாகிவிடும். அப்படி ஆகுமுன்னேயே, நாம் அதில் பதிக்க வேண்டிய நல்லொழுக்கங்களையெல்லாம் பதித்துவிடவேண்டும்.

அப்படிப் பதிக்கவேண்டிய நல்லொழுக்கங்களுள் முக்கியமானது கீழ்ப்படிதல் என்பது. பெற்றோர் எப்பொழுதும் தம்முடைய நலனையே நாடுவார்கள்; ஆகையால், அவர்கள் சொல்லுக்கு மறுவார்த்தை சொல்லக்கூடாது; அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்; அதுவும் மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிய வேண்டும் என்ற புத்தி அவனுக்குச் சிறு வயதிலேயே

எதிரிலேயே ...

இதனால், குழந்தைக்கு ...
கும்; பிற் காலத்தில் என்ன அனர்த்தம
யும் என்று அவர்கள் யோசிப்பதில்லை. குழந்தை பார்க்கிறான். பெற்றோருக்குக் கீழ்ப்படியாததற்கு அவர்கள் ஒன்றும் செய்யவில்லை; ஏன், அவர்கள் மகிழக்கூடச் செய்தார்கள்; தன்னை மெச்சிக்கொண்டார்கள்; ஆகையால், அவர்களுக்குக் கீழ்ப்படியாதது குற்றமில்லை; அது ஒரு பெருமை போலும் என்று எண்ணுகிறான். இப்படியாக, குழந்தைக்குக் கீழ்ப்படியாத புத்தி படிந்து விடுகிறது. பெற்றோர் இதற்கு இடங்கொடுக்கவே கூடாது. சின்னக்

பிழ ...
யது; இளமையிலே உண்டா...
பிறகு இலேசிலே மாற்ற முடியாது.

குழந்தை மனது ஒரு நிலத்துக்குச் சரி. நாம் அந்த நிலத்திலே கீழ்ப்படியாமை முரண்டு பிடிவாதம் ஆகிய தினை விதைத்தால் அதே தினையைத்தான் பிறகு அறுப்போம். இந்த மாதிரி விதைப்புக்கு எப்பொழுதும் நல்ல மேனியே காணுகிறது.

—நல்வழி.

II. 1. தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்.
2. நகத்தாற் கிள்ளியெறிவதை, கோடரி கொண்டு வெட்டினாற்போல.
3. தை உழவு ஐயாட்டுக் கிடை.
4. ஆட்டேரு அந்த வருடம் மாட்டேரு மறு வருடம்.
5. ஆற்று மண்ணுக்கு வேற்று மண் உரம்.
6. எண்ணெய் காணாத மயிரும், தண்ணீர் காணாத பயிரும்.
7. தண்ணீரில்லாத வேளாண்மையும், தானுழாத நிலமும் தரிசு.
8. கல் உள்ளதே கிணறு; கரை உள்ளதே தோட்டம்.
9. இறைத்த கிணறு ஊறும்; இறையாத கிணறு நாறும்.
10. தாசீல் பண்ணினாலும் பண்ணலாம்; தண்ணீர் மாற முடியாது.

III. வீட்டிலே கோபமும் சண்டையும் துக்கமும், சிரிப்பும், சத்தமும் திடீர் திடீரென உண்டாகிக்கொண்டிருந்தால், பிள்ளைகளுக்கு என்ன புத்தி உண்டாகும்? சண்டை போடுகிற புத்தியும் சத்தம் போடுகிற புத்தியும்தானே உண்டாகும்? தங்களுடைய உணர்ச்சிகளை அடக்க வேண்டுமென்கிற புத்தி எந்நாளேனும் வருமா?

பிள்ளைகளுக்கு நற்குணமும் நல்லொழுக்கமும் அமையவேண்டுமென்றால், அவை முதலில் பெற்றோருக்கு இருந்தாக வேண்டும். தாயைப் போலப்பிள்ளை யென்பது எந்நாளும் உண்மை. அதற்கு மாற்றுக் கிடையாது. பெற்றோரிடத்தில் அன்பு, அமைதி, தன்னடக்கம் தன்னலமறுப்பு முதலிய நற்குணங்கள் இருந்தால், அவற்றைக் காணுகிற குழந்தையிடத்திலும் அவை விளங்கும்.

—நல்வழி.

(நல்வழியின் ஆண்டு வரி ரூ. 3-8-0; கிடைக்குமிடம்,
The Oriental Watchman Publishing House,
Salisbury Square,
Poona.

## 1942-... ப்பிரல் மீ

## விசு ௵ பங்குனி மீ சித்திரபா... ௵ சித்திரை மீ கொல்லம் 1117-௵

### திதி, நட்சத்திரம், தியாச்சிய... முதலியவை.

| | இ. | | த. | கிழ. | |
|---|---|---|---|---|---|
| | 1 | | 19 | புத | பௌ-32-25, அத்-54-9, திவி-17-16, ○ பௌ, கரி. |
| | | | 20 | வியா | பிர-28-23, சித்-51-35, திவி-13-18, கிறித்தவ விடுமுறை. |
| | 3 | | 21 | வெ | துதி-23-37, சுவா-48-21, திவி-4-49, ஈஸ்டர் விடுமுறை. |
| | 4 | | 22 | சனி | திரு-18-15, விசா-44-36, திவி-1-29, ரா-23-41, ஈஸ்டர் விடுமுறை. |
| | 5 | | 23 | ஞா | சது-12-27, அனு-40-33, ரா-23-21. |
| | 6 | பங்குனி மீ | 24 | திங் | பஞ்-6-27, கேட்-36-28, ரா-24-52. |
| | 7 | | 25 | செ | சட்டி-0-31, சப்-54-17, மூல-32-32, ரா-24-46. |
| | 8 | | 26 | புத | அட்-49-23, பூரா-28-51, திவி-17-28. |
| | 9 | | 27 | வியா | நவ-44-37, உத்திரா-25-39, ரா-4-53. |
| | 10 | | 28 | வெ | தச-40-34, திருவோ-23-9, ரா-2-30. |
| | 11 | | 29 | சனி | ஏகா-37-29, அவிட்-21-31, ரா-8-56, ஏகா. |
| | 12 | | 30 | ஞா | துவா-35-25, சத-20-25, ரா-6-38. |
| ஏப்பிரல் மீ | 13 | | 1 | திங் | திரயோ-34-33, பூரட்-21-26, ரா-15-45, விசு புண்ணிய காலம், பிரதோடம், விடுமுறை. |
| | 14 | | 2 | செ | சதுர்-34-57, உத்திரட்-23-12, ரா-24-15. |
| | 15 | | 3 | புத | அமா-36-36, ரேவ-26-14, ● அமாவாசை. |
| | 16 | | 4 | வியா | பிர-39-27, அசு-30-25, திவி-19-43, ரா-25-59. |
| | 17 | | 5 | வெ | துதி-43-19, பர-35-37, சேடம்-0-15. |
| | 18 | | 6 | சனி | திரு-47-53, கார்-41-33, திவி-8-35, ✷ கார்த்திகை. |
| | 19 | | 7 | ஞா | சது-52-51, உரோ-47-52, திவி-25-46, சதுர்த்தி. |
| | 20 | | 8 | திங் | பஞ்-57-51, மிருக-54-15, திவி-3-26. |
| | 21 | | 9 | செ | சட்டி-60-0, திருவா-60-0, திவி-6-23, சட்டி. |
| | 22 | | 10 | புத | சட்டி-2-36, திருவா-0-23, ரா-2-46. |
| | 23 | | 11 | வியா | சப்-6-26, புனர்-5-42, திவி-27-9. |
| | 24 | சித்திரை மீ | 12 | வெ | அட்-9-16, பூச, 10-3, ரா-13-9. |
| | 25 | | 13 | சனி | நவ-10-57, ஆயி-13-17, ரா-13-38. |
| | 26 | | 14 | ஞா | தச-11-19, மக-15-15, ரா-4-50. |
| | 27 | | 15 | திங் | ஏகா-10-27, பூர-15-59, ரா-3-10, கரிநாள் ஏகா. |
| | 28 | | 16 | செ | துவா-8-22, உத்தி-15-33, ரா-6-18, பிரதோடம். |
| | 29 | | 17 | புத | திரயோ-5-12, அத்-14-4, ரா-2-30 |
| | 30 | | 18 | வியா | சதுர்-1-5, பௌ-55 6, சித்-11-40, திவி-24-57, ○ பௌர்ணமி. |
| | 1 | | 19 | வெ | பிர-50-48, சுவா-8-36, திவி-21-46. |
| | 2 | | 20 | சனி | துதி-44-58, விசா-5-1, திவி-14-21. |
| | 3 | | 21 | ஞா | திரு-38-57, அனு-1-0, கேட்-55-54, திவி-14-3, தீ நாள் தொடக்கம். |
| | 4 | | 22 | திங் | சது-32-54, மூல-52-51, திவி-14-53. |
| மே மீ | 5 | | 23 | செ | பஞ்-26-56, பூரா-49-5, திவி-15-21. |
| | 6 | | 24 | புத | சட்டி-21-30, உத்திரா-45-50, திவி-8-0, ரா-24-34. |
| | 7 | | 25 | வியா | சப்-16-44, திருவோ-43-9, ரா-22-1. |
| | 8 | | 26 | வெ | அட்-12-35, அவிட்-41-18, ரா-28-4. |

Regd. No. 4126.

தேடும் பருவமிது கண்டீர்; சே[illegible] செகத்தீரே.—தாயுமானவர்.

# "கிராம[illegible]தன்."

## ஒரு கிராம முன்னேற்ற[illegible]தேசிய மாதப் பத்திரிகை.

கிராம முன்னேற்றமே, தேச [illegible]ன்னேற்றமாகும். கிராம முன்னேற்றத்திற்கும் நகர வாசிகள் சுக வாழ்விற்கும் அவசியமான விபசாயம், [illegible] கைத்தொழில், குடிசைத்தொழில், கல்வி, சுகாதாரம், [illegible] வாழ்க்கை பற்றிய பல நல்லுரைகளும், கதைகளும், மற்றும் கிராம வாசிகள், விபசாயிகளுக்குப் பிரயோசனமான செய்திகளும், அறிவுரைகளும், பஞ்சாங்கம் முதலியனவும் பிரதி அங்கிலமாதம் முதல் ஐந்து தெய்திக்குள் இந்தப் பத்திரிகையில் வெளி வரும். இதைப் படித்து, இதில் காணும் நலங்களைப் பிறர்க்குச் சொல்லுங்கள். சந்தேகம் [illegible]தானழி ளுல், குறை ஏதும் கண்டால் பத்திராதிபருக் கெழுதுங்கள்.

வி. பி. தபாலினுல், சந்தாதாருக்கு அனாவசியமாகத் தபாற்செலவு அதிகமாவதால், இக் தப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை. சந்தா முன் பணமாகச் சேலுத்தியிருக்கும் காலம்வரைக்கே பத்திரிகை யனுப்பிவரப்படும்.

பத்திராதிபர்.
இரா. கு. நல்லகுற்றுலம் பிள்ளை,
சிவில்லிபுத்தூர்.

பிரசுரகர்த்தர்.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டு வருடச்சந்தா | ... | ரூ | 1—8—0 | ஒரு பக்கம் விளம்பரம் ஒரு தடவை | 10—0—0 |
| வெளி ,, | ... | ரூ | 2—0—0 | அரைப்பக்கம் ,, | 6—0—0 |
| தனிப் பிரதி விலை | ... | ரூ | 0—2—0 | கால்பக்கம் ,, | 3—0—0 |

1-வது மலர் (1939-ம் ஆண்டு 12 இதழ்கள்) 2-வது மலர் (1940-ம் ஆண்டு 12 இதழ்கள்) 3-வது மலர் (1941-ஆண்டு 12 இதழ்கள்) பைண்டு செய்து சில பிரதிகளேயிருக்கின்றன. தனித்தனி விலை ரூ. 1—4—0

## கால்நடைச் சந்தைகளும் விபசாயக் கண்காட்சிகளும்

(ஏப்பிரல்-மே மீ பஞ்சாங்கம் உட்பக்கம் பார்க்க.)

தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை தோறும் கால்நடைச் சந்தை நடைபெறுகிறது. திரிசிராப்பள்ளி சில்லா கரூர் தாலுகா உப்பிடமங்கலத்திலும் உடையார்பாளையம் தாலுகா அரியலூரிலும் ஞாயிற்றுக் கிழமை தோறும், கரூர் தாலுகா பரமதியிலும் முசிரித்தாலுகா தொட்டியத்திலும் செவ்வாய்க்கிழமை தோறும், குளித்தலைத்தாலுகா மணப்பாரையில் புதன் கிழமை தோறும் கால்நடைச் சந்தைகள் நடை பெற்று வருகின்றன. கோயம்புத்தூர் தாலுகா துடியலூரில் திங்கட்கிழமை தோறும், கோபிச்செட்டி பாளையம் தாலுகா புளியம்பட்டியிலும் பொள்ளாச்சியிலும் வியாழக்கிழமை தோறும் கால்நடைச் சந்தை கள் நடைபெற்று வருகின்றன.

சேலம் சில்லா இராசிபுரம் தாலுகா புதுப்பட்டியில் ஏப்பிரல் மாதம் 19ம் உ யிலிருந்து நான்கு நாட்கள் மாரியம்மன் உற்சவத்தின்போது கால்நடைச் சந்தை நடைபெறும். கோயம்புத்தூர் சில்லா அவனாசியில் ஏப்பிரல் மாதத்திலும் பவானித் தாலுகா அந்தியூரிலும் தாராபுரம் தாலுகா கன்னபுரத்திலும் ஏப்பிரல் மாதமத்தியிலும் கால் நடைச் சந்தைகளும் விவசாயக் கண்காட்சிகளும் நடைபெறும். தென் ஆற்காடு சில்லா திருக்கோயிலூர் தாலுகா கூவகத்தில் ஏப்பிரல் மே மாதங்களில் 20 நாட்கள் கால் நடைச் சந்தையும் விவசாயக் கண்காட்சியும் நடைபெறும். மதுரை சில்லா பழனித் தாலுகா இடைய கோட்டையில் ஏப்பிரல் மாதம் முதல் வாரத்திலும் பெரியகுளம் [illegible] வீரபாண்டியில் மே மாதம் 6-ம் உ யிலிருந்து 15 நாட்களும் கால்நடைச் சந்தைகள் நடைபெறும். [illegible]ருநெல்வேலி சில்லா கோயிற் பட்டித்தாலுகா கழுகுமலையில் பங்குனி உத்தரத்தை யடுத்து மார்ச்சு ஏப்பிரல் மாதங்களில் 30 நாட்களும் பசுவந்தனையில் சித்திரை மாதம் ஏப்பிரலில் 15 நாட்களும் திருநெல்வேலித் தாலுகா சீவல்லபப்பேரியில் சித்திரை விசுவை யொட்டியும் கால்நடைச் சந்தைகள் நடைபெறும்.

Printed at the Excelsior Power Press, North Chitrai St., Madura:-42.